விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 093 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 08 சனிக்கிழமை (22.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறியது

# அநுர அரசின் கன்னி பட்ஜெட்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கன்னி வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நேற்று வெள்ளிக்கிழமை மாலை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் பிரச்சினையை பட்ஜெட் தீர்க்கவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தின் ஆரம்பம் முதல் நாட்டின் பிர தான பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கு நிலையான

02ஆம் பக்கம் பார்க்க

## இளவாலை சேந்தாங்குளத்தில் நீரில் மூழ்கிய இளைஞன் பலி

### நண்பர்களுடன் குளிக்கச் சென்றவேளை பரிதாபம்



(யாழ்ப்பாணம்)

இளவாலை சேந்தாங்குளம் கடலில் நண்பர்களுடன் குளிக்

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் இனப் பிரச்சினையை

# சர்வதேசத்தால் தீர்க்க முடியாது

### முன்னாள் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் இனப் பிரச்சினையை சர்வதேசத்தால் தீர்க்க முடியாது. பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உள்ளகப் பொறிமுறைமூலமே தீர்வு வழங்க முடியும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

கோப்பாய் தெற்கில்

## தீக்காயத்துக்குள்ளான பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கில் தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அதே இடத்தைச்சேர்ந்த தம்பிராசா கோதை நாயகி (வயது-62) என்ற நான்கு பிள்ளைகளின் தாயே உயிரிழந்தவராவார்.

15ஆம் பக்கம் பார்க்க

## இந்தியப் பிரதமர் மோடி ஏப்ரல் 5ஆம் திகதி இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 5ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில்

15ஆம் பக்கம் பார்க்க

மானிப்பாயில்

## 20 வயது குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கட்டுடையில் 20 வயதான இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்

02ஆம் பக்கம் பார்க்க



## எம்.பிக்களுக்கான ஓய்வூதியத்தை நீக்கும் சட்டமூலம் விரைவில்

### பாராளுமன்றில் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இல்லாம லாக்குதல் மற்றும் ஜனாதிபதியின் சிறப்புரிமைகளைத் திருத்தம் செய்தல் தொடர்பான சட்ட மூலங்கள் விரைவில் பாராளுமன்

15ஆம் பக்கம் பார்க்க

## அளவெட்டியில் இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டியில் இளை ஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் அளவெட்டி மேற் கைச் சேர்ந்த அருட்பிரகாசம்

02ஆம் பக்கம் பார்க்க

## வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக சட்டநடவடிக்கை

### மணிவண்ணன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது வேட்புமனுக்கள் நிரா கரிக்கப்பட்டமைக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் உபசெயலாளர் விஸ்வலிங்கம் மணிவண் ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவிய லாளர்கள் மத்தியில் கருத்து

15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய மாணவர்கள் துன்புறுத்தல்

### விசாரணை நடத்த மூவர் கொண்ட குழு நியமனம்

(வவுனியா)

வவுனியா தேசிய கல்வியி யற் கல்லூரியில் ஆசிரிய மாண வர்கள் துன்புறுத்தப்படுவதா கக் கூறப்படும் சம்பவம் தொடர் பில் விசாரணை நடத்த மூவர் கொண்ட குழு கல்வி அமைச் சால் நியமிக்கப்பட்டுள்ளதாக மனிதவுரிமை ஆணைக் குழு வின் பிராந்திய இணைப் பாளர் த.கனராஜ் தெரிவித் துள்ளார்.

வவுனியா கல்வியியற் கல்லூரி தொடர்பாகக் கிடைக்கப் பெற்ற

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வராக் கல்லூரி – இயக்குநர் சபைக்கு புதிய உறுப்பினர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பரமேஸ்வராக் கல்லூரியின் இயக்குநர் சபைக்கு நான்கு உறுப்பினர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகப் பரமேஸ்வரன் ஆலய மண்டபத்தில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நேற்று (21) இடம்பெற்ற கூட்டத்திலேயே புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

பேராசிரியர் பூபாலசுந்தரம் ஐங்கரன், பேராசிரியர் கு.மிகுந்தன், பிரம்மஸ்ரீ பத்மநாத சர்மா, பொறியியலாளர் கடம்பசீலன் ஆகியோரே புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக் கூட்டத்தில் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், பேராசிரியர் மா.வேதநாதன், ஜெகதீசன், பாலபுத்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-7)

## அளவெட்டியில்...

(வயது-35) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குடும்பத் தகராறு காரணமாக இவர் சுருக்கிட்டு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## 20 வயது...

தினம் உயிரிழந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த யோகிதாப் நாகராணி (வயது-20) என்ற 4 மாத ஆண் குழந்தையின் தாயே உயிரிழந்தவராவார்.

குடும்பத் தகராறு காரணமாக சுருக்கிட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## மக்களின்...

தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நிலைப்பாட்டிலேயே ஐக்கிய மக்கள் சக்தி இருந்தது.

ஆனால் இந்த வரவு செலவுத் திட்டம் அத்தகைய தீர்வை வழங்கவில்லை. இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு சாதகமான தீர்வுகளை வழங்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் விளக்கமளித்தால், பொல்துவ சந்தியில் இன்று (நேற்று)ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேலையற்ற பட்டதாரிகளின் நம்பிக்கைகள், அபிலாஷைகள் ஏமாற்றமடைந்துள்ளன.

தற்போதைய அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரகாரம், இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 35,000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

வழங்கிய ஏராளமான வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன. இம்மக்கள் பெரும் ஏமாற்றத்தில் இருக்கும் நேரத்தில், இந்த நாட்டிற்கு ஒரு புதிய பயணமும் தொலைநோக்குப் பார்வையும் அதன் பிரகாரம் அமைந்த ஒரு வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இது மக்களைப் பாதுகாத்து மக்களை வாழவைக்கும் வேலைத் திட்டமாக அமைந்திருக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ம-7)

## சர்வதேசத்தால்...

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நான் இலங்கையைச் சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதை எப்போதும் எதிர்த்து வந்துள்ளேன்.

ஏனெனில் இலங்கையின் இனப் பிரச்சனையினை சர்வதேசத்தால் தீர்க்கமுடியாது. ஆகவே பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உள்ளகப் பொறிமுறையின் கீழ் நீதியை நிலைநாட்டுங்கள். யார் குற்றவாளி என்றாலும் தண்டியுங்கள் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டோர்களுடன் கலந்துரையாடுங்கள். மாகாணசபைகளுக்கு மேலதிக பொறுப்புக்களை அதிகாரங்களை வழங்குங்கள். இனப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் என்பது குறித்து ஆராயுங்கள். நான் இதற்காகப் பலமுறை முயற்சி செய்தேன்.

ஐ.நாவுக்கு இலங்கை அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். உள்ளகப்பொறிமுறையின் கீழ் தமிழர்களுக்குநீதியை நிலைநாட்டுங்கள். குற்றவாளிகள் யார் என்றாலும் தண்டியுங்கள். இதனைச்செய்யக்கூடாது என நான் ஒருபோதும் தெரிவித்ததில்லை. இதன்காரணமாகவே நான் தேர்தல்களில் தோற்றேன் என்றார். (ம-7)





பணியாளர் தேவை

✧ தொழில்நுட்ப அலுவலர் NDT, HNDE, NCT
✧ கட்டட மேற்பார்வையாளர் (ஆண், பெண்)
✧ அலுவலக உதவியாளர் (பெண்)

RUDRAM ENGINEERING (PVT) LTD
UDUVIL, JAFFNA.
: 077 649 8548
(948)




வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127




காணி விற்பனைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள பலாலி வீதியிலிருந்து 40m தொலைவில் HNB வங்கிக்கும் Sunway Supermarket க்கும் மிக அருகில்

- வெட்டுக்கிணறு
- சுற்றுமதிலுடன் கூடிய
- ஒரு குடும்பம் வசிக்கக்கூடிய வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு : 077 690 1708
(3709)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் சிக்குன்குனியா எச்சரிக்கும் மருத்துவர்கள்

(கொழும்பு)

**இலங்கையில் நுளம்புகளால் பரவும் வைரஸ் நோயான சிக்குன்குனியா வேகமாகப் பரவி வருவதுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இது போன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இது தொடர்பில் தகவல் வழங்கியுள்ள மருத்துவ ஆலோசகர் அச்சலா பாலசூரிய, சிக்குன்குனியா என்பது தொற்றுள்ள ஏடிஸ் நுளம்புகள், ஏடிஸ் எஜிப்டி மற்றும் ஏடிஸ் அல்போபிக்டஸ் ஆகியவை கடித்தால் பரவுகிறது என்றும் தெரிவித்தார்.

சுமார் 4 முதல் 7 நாட்கள் அடைகாக்கும் காலத்திற்குப் பிறகு, இந்தத் தொற்றுள்ள நுளம்புகள் வைரஸைப் பரப்பக்கூடும்.

இந்த நுளம்புகள் அதிகாலை மற்றும் பிற்பகல் நேரங்களில் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும். மேலும் அவை பூந்தொட்டிகள், ரயர்கள், வாளிகள் மற்றும் அடைபட்ட வடிகால் போன்ற கொள்கலன்களில் உள்ள தேங்கி நிற்கும் நீரில் இனப்பெருக்கம் செய்கின்றன.

இந்த நோய் ஒருவருக்கு நேரடியாகப் பரவுவதில்லை. நுளம்பு கடித்தால் மட்டுமே பரவுகிறது.

இதன் பாதிப்பாக, மூட்டு வலி. குறைந்தது ஒரு மாதமாவது நீடிக்கும், என்று மருத்துவ ஆலோசகர் தெரிவித்துள்ளார்.


நோயின் முக்கிய அறிகுறிகளில் திடீரென அதிக காய்ச்சல், கடுமையான மூட்டு வலி, தசை வலி, தலைவலி, குமட்டல், சோர்வு மற்றும் தோல் வெடிப்புகள் ஆகியவை அடங்கும்.

பெரும்பாலான நோயாளிகள் ஒரு வாரத்திற்குள் குணமடைந்தாலும், மூட்டு வலி சில சமயங்களில் மாதங்கள் அல்லது ஆண்டுகள் கூட நீடிக்கும். குறிப்பாக வயதானவர்களுக்கு இது பொருந்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நுளம்பு இனப்பெருக்கம் செய்யும் இடங்களை அகற்றுவது மட்டுமே, தொற்று நோயைக் கட்டுப்படுத்த மிகவும் பயனுள்ள வழி என்று மருத்துவ ஆலோசகர் அச்சலா பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை முழுவதும் சிக்குன்குனியா பாதிப்பு அதிகரித்து வருவதால், அதன் அறிகுறிகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர். (நி)

# ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவை விரைந்து வழங்குமாறு கோரிக்கை



(கொழும்பு)

2016 முதல் 2019 வரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்றவர்களுக்கான கொடுப்பனவுகளை வெகு விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாண ஓய்வூதியர் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் அமைப்பு தங்களுக்குரிய குறைகளை தெரிவித்துள்ளனர்.

அதாவது 2016 - 2019 வரை ஓய்வு பெற்றவர்களுக்கு 2020.01.01 இல் வழங்குவதற்குரிய ஓய்வூதியமானது நாட்டின் நிலைமை காரணமாக கோட்டாபாய அமைச்சரவையினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக தேசிய மக்கள் சக்தி சார்பான ஓய்வூதியர் சங்கத்தினர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதுடன் ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து வந்தனர்.

2016 -2019 வரை பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் தேசிய மக்கள் சக்தியின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில் இதற்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தனர்.

2020 இல் கிடைக்க வேண்டிய கொடுப்பனவு 2025 வரை ஐந்தாண்டுகளாக காத்திருந்தவர்களுக்கு அந்தக் கொடுப்பனவு மூன்று கட்டங்களாக 2027 வரை வழங்க கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவு பெற வேண்டியவர்களில் 2000 பேர் அளவில் இறந்துவிட்டனர். இந்த நிலையில் தற்போதைய அரசும் ஓய்வூதியர் வாழ்வுக் காலம் பற்றிச் சிந்திக்காது கொடுப்பனவை வழங்குவதை மேலும் மூன்றாண்டுகளுக்கு பிற்போடுவதாக அவர்கள் கவலையடைகின்றனர்.

இந்த நிலையில் அந்தக் கொடுப்பனவுகளை வெகு விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

# ஜப்பானிடமிருந்து 590 மில்லியன் நிதி

(கொழும்பு)

ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தின் தீயணைப்புப் பிரிவினை வலுப்படுத்துவதற்காக ஜப்பான் 590 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கியது.

நாட்டிலுள்ள 14 ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் உள்ள 285 நிறுவனங்களில் 145,000 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

குறித்த முதலீட்டு வலயங்களுக்காக முதலீட்டு சபையின் ஊடாக உபகரணங்களை வழங்குதல் மற்றும் வசதிகளை மேம்படுத்துவதற்காக இந்த நிதியுதவி பயன்படுத்தப்படும் என நிதியமைச்சு தெரிவித்தது. (நி)

# கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்த புதிய திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் கைவினைப் பொருட்களைச் சர்வதேச சந்தைக்கு அறிமுகப்படுத்த உதவும் ஒரு திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தினதும் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை யின் கூட்டு முயற்சியாகும்.

இலங்கையின் பாரம்பரிய கைவினைப் பொருட்களை சர்வதேசச் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதும், உள்ளூர் வடிவமைப்பாளர்களுக்கு உலகளாவிய வாய்ப்புகளை உருவாக்குவதும் இதன் நோக்கமாகும். (நி)

# விமானப் படையின் ஜெட் விமானம் விபத்துக்குள்ளானது



(கொழும்பு)

இலங்கை விமானப் படையின் சீன K-8 பயிற்சி விமானம் நேற்று வாரியப்போலாவில் விபத்துக்குள்ளானதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் உள்ள சீன விரிகுடா விமானப் படைத் தளத்தில் இருந்து புறப்பட்ட விமானம், விபத்துக்கு முன்னர் ரேடார் தொடர்பை இழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் விமானப் படை கருத்து தெரிவிக்கையில்,

குறித்த விபத்தின் போது விமானத்தில் இருந்த இரண்டு விமானிகளும் பாதுகாப்பாக வெளியேறி பரசூட்களைப் பயன்படுத்தி தரையிறங்கியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழப்புகள் அல்லது காயங்கள் எதுவும் ஏற்படவில்லை, என்பதுடன் இந்த விபத்தில் அப்பகுதியில் உள்ள பொது மக்கள் யாரும் பாதிக்கப்படவில்லை.

அதேவேளை குறித்த விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று சற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 68.26 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன், பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 72 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

இதேவேளை உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 3.93 அமெரிக்க டொலராக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# பிரமாண்ட தொடக்க விழாவுடன் ஐ.பி.எல் போட்டி இன்று ஆரம்பம்

## கொல்கத்தா – பெங்களூர் பலப்பரீட்சை



உலகின் மிகவும் எதிர் பார்க்கப்படும் கிரிக்கெட் போட்டிகளில் ஒன்றான 2025 இந்தியன் பிரீமியர் லீக் ஐ.பி.எல் போட்டியின் 18 ஆவது சீசன் இன்று கொல்கத்தாவின் ஈடன் கார்டனில் ஒரு பிரமாண்டமான தொடக்க விழாவுடன் ஆரம்பமாகவுள்ளது.

நடப்பு சம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் தொடக்க விழாவிற்குப் பின்னர் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு எதிரான முதல் போட்டியில் விளையாடவுள்ளது.

இந்தச் சீசனில் 65 நாட்களில் மொத்தம் 74 போட்டிகள் 13 மைதானங்களில் நடத்தப்படுகின்றன.

இந்த ஆண்டு 70 லீக் போட்டிகள் மற்றும் நான்கு பிளே ஆஃப்களுடன் விளையாடப்படும்.

பழைய முறையிலேயே போட்டிகள் நடத்தப்படுகின்றன, அதாவது, உள்ளூர் மற்றும் வெளியூர் அடிப்படையில் நடத்தப்படவுள்ளன.

அதாவது லீக் கட்டத்தில் ஒவ்வொரு அணியும் விளையாடும் 14 போட்டிகளில் ஏழு போட்டிகள் அவரவர் மைதானத்திலும், மற்ற ஏழு போட்டிகள் எதிரணி அணிகளின் மைதானத்திலும் நடைபெறும்.

இந்தக் கணக்கீட்டின் படி ஒவ்வொரு அணியும் லீக் கட்டத்தில் மொத்தம் 14 ஆட்டங்களில் விளையாடும். முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் பிளே ஆஃப் சுற்றுக்கு முன்னேறும்.

முதல் இரண்டு அணிகள் முதல் தகுதிச் சுற்றில் விளையாடும்.

வெற்றி பெறும் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்குள் நுழையும்.

தோல்வியடையும் அணிக்கு இன்னொரு வாய்ப்பு கிடைக்கும். இரண்டாவது எலிமினேட்டரில் மூன்று மற்றும் நான்காவது இடத்தில் உள்ள அணிகள் விளையாடும்.

தோல்வியுற்ற அணி வெளியேறும். வெற்றி பெறும் அணி முதல் தகுதிச் சுற்றில் தோல்வியடைந்த அணியுடன் இரண்டாவது தகுதிச் சுற்றில் விளையாடும். அதில் வெற்றி பெறும் அணி இறுதிப்போட்டிக்குள் நுழையும்.

குறித்த இறுதிப் போட்டியானது மே 25 ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவராக கிறிஸ்டி கோவென்ட்ரி



ஜிம்பாப்வே ஒலிம்பிக் கமிட்டியின் தலைவரும் இரண்டு முறை ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்றவருமான கிறிஸ்டி கோவென்ட்ரி சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கிரேக்கத்தின் கோஸ்டா நவரினோவில் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் குழுவின் (IOC) 144 ஆவது அமர்வின் போது இந்தத் தேர்தல் நடைபெற்றது.

போட்டியில் கோவென்ட்ரி ஒரு விருப்பமானவராகக் கருதப்பட்டாலும் அவரது வெற்றியின் வித்தியாசம் பல பார்வையாளர்களை திகைக்க வைத்தது.

உலக தடகளத் தலைவர் செபாஸ்டியன் கோ மற்றும் IOC இன் துணைத் தலைவர் ஜுவான் அன்டோனியோ சமரஞ்ச் ஜூனியர் உள்ளிட்ட ஏழு வலுவான வேட்பாளர்களைக் கொண்ட முதல் சுற்று வாக்குகளில் அவர் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றார். கோவென்ட்ரியின் இந்த வெற்றியானது அவரைக் குறித்த பதவியை வகிக்கும் முதல் பெண் மணியாகவும், முதல் ஆபிரிக்கராகவும் ஆக்குகிறது.

தேர்தல் முடிவுகள் அதிகாரப்பூர்வமான பின்னர் ஒரு செய்தியாளர் கூட்டத்தில், உலகின் அனைத்துப் பகுதிகளிலும் ஒலிம்பிக்கை மேலும் திறந்தவெளியாக மாற்றுவதற்கும், உலகம் முழுவதும் பாலங்களை உருவாக்குவதற்குமான நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென கிறிஸ்டி கோலென்ட்ரி தெரிவித்தார். (நி-6)

# போர்த்துக்கல் அணியை வீழ்த்தியது டென்மார்க்



நேஷனல் லீக் கால்பந்து தொடரில் போர்த்துக்கல்லை வீழ்த்தி டென்மார்க் அசத்தல் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் ரொனால்டோவுக்கு எதிராக அவரது பாணியில் கொண்டாடிய டென்மார்க் வீரரின் விடியோ வைரலாகி வருகிறது.

நேஷனல் லீக் காலிறுதி லெக் 1 போட்டியில் டென்மார்க் 1-0 என போர்த்துக்கல்லை வென்றது. இதில் 78ஆவது நிமிடத்தில் ராஸ்மஸ் ஹோஜ்லன்ட் கோல் அடித்து அசத்தினார்.

இந்தக் கோல் அடித்த பிறகு ரொனால்டோவுக்கு எதிராக அவரது பாணியில் "ஸ்யூ" எனக் கொண்டாடியது பேசுபொருளாகியுள்ளது.


ராஸ்மஸ் ஹோஜ்லன்ட் இது குறித்து பேசும்போது, "நான் எனது விருப்பமான ஒருவரை எப்படி கிண்டல் செய்ய முடியும்.

நான் 2011இல் இருந்து ரொனால்டோவின் மிகப்பெரிய ரசிகன். அந்த அணிக்கு எதிராக கோல் அடித்தது மிகப்பெரிய விடயம்" என்றார்.

இது டென்மார்க் அணிக்காக அவரது இந்த சீசனின் 7ஆவது கோல் ஆகும். மான்செஸ்டர் சிட்டியில் 8 கோல்கள் அடித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியது வடகொரியா



(பியாங்யாங்)

அணு ஆயுதங்களுடன் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வரும் நாடு வடகொரியா.

கொரிய தீபகற்பத்தில் வடகொரியா, தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகிறது. தன் எதிரி நாடுகளாக கருதும் தென் கொரியா, ஜப்பான், அமெரிக்காவை சீண்டும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது.

மேலும் தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் வந்தால் தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா எச்சரித்து வருகிறது.

இந்நிலையில், தற்போது மீண்டும் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது. எதிரி நாட்டு போர் விமானங்களை தாக்கி அழிக்கும் புதிய ஏவுகணை சோதனை நடத்தப்பட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, தென்கொரியா இணைந்து போர் பயிற்சியில் ஈடுபட்ட நிலையில் அதற்கு பதிலடியாக இந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டுள்ளது. (நி)

# வெடித்துச் சிதறிய பாலி எரிமலை



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் பிரபல சுற்றுலாத்தலமான பாலியில் எரிமலை வெடித்து குமுறத் தொடங்கியுள்ளது.

இதையடுத்து அங்குள்ள விமான நிலையத்தில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்தோனேசியா நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலம் பாலி. உலகம் முழுவதும் இருந்து இங்கு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

இங்கு லெவோடோபி லகிலகி என்ற 1703 மீற்றர் உயரம் கொண்ட இரட்டை சிகரம் கொண்ட எரிமலை உள்ளது.

இந்த எரிமலை நேற்று முன்தினம் இரவு முதல் வெடித்துக் குமுறி வருகிறது. எரிமலையில் இருந்து 8 கிலோ மீற்றர் தூரத்திற்கு கரும் சாம்பல் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதையடுத்து, பாலி விமான நிலையத்துக்கு செல்லவிருந்த 7 சர்வதேச விமானங்கள், இரத்து செய்யப்பட்டன. (நி)

# மின்துண்டிப்பால் மூடப்பட்ட ஹீத்ரோ விமான நிலையம்



(லண்டன்)

அருகிலுள்ள மின்சார துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட பெரிய தீவிபத்து காரணமாக, ஏற்பட்ட மின்தடையால் லண்டனின் ஹீத்ரோ விமான நிலையம் நேற்று வெள்ளிக்கிழமை முழுவதும் மூடப்பட்டது.

ஹீத்ரோ விமான நிலையம் இங்கிலாந்தின் மிகப்பெரிய விமான நிலையமாகும்.

இது ஒவ்வொரு நாளும் சுமார் 1,300 தரையிறக்கங்கள் மற்றும் புறப்பாடுகளைக் கையாளுகிறது. கடந்த ஆண்டு அதன் முனையங்கள் வழியாக 83.9 மில்லியன் பயணிகள் கடந்து சென்றது சாதனையாகும்.

இது இவ்வாறிருக்க மேற்கு லண்டனில் உள்ள ஹேய்ஸில் உள்ள துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஆயிரக்கணக்கான வீடுகளுக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டது மற்றும் சுற்றியுள்ள குடியிருப்புக்களில் இருந்து சுமார் 150 பேர் வெளியேற்றப்பட்டனர்.

தீயை அணைக்க பத்து தீயணைப்பு இயந்திரங்களும் சுமார் 70 தீயணைப்பு வீரர்களும் அனுப்பப்பட்டுள்ளதாக லண்டன் தீயணைப்பு படை தெரிவித்துள்ளது.

தீ விபத்து காரணமாக ஏற்பட்ட பெரிய அளவிலான மின் தடை காரணமாக 16,300 இற்கும்மேற்பட்ட வீடுகள் மின்சாரத்தை இழந்துள்ளதாக எரிசக்தி விநியோகஸ்தர்கள் தெரிவித்தனர். (நி)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில்
தகவல் தொழில்நுட்பவியல் பாட
ஆசிரியராகக் கடமையாற்றும்
க.நிஷாந் அவர்களின் அன்புத் தயார்

திருமதி
**கனகராசா கமலாவதி**

அவர்கள் 20.03.2025 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்
அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்,
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்

(3712)

# இராசிபலன்

22.03.2025
பங்குனி 08, சனிக்கிழமை
அட்டமி பின்னிரவு 1.33 மணிவரை

மூலம் முன்னிரவு 11.48 மணிவரை
சுபநேரம் 3.17-4.47 மணிவரை
இராகுகாலம் 9.17-10.47 மணிவரை

சந்திராஷ்டமம்
கார்த்திகை, ரோகிணி

வளவன்



**மேஷம்**

அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், பயணங்கள் கைகூடும்.



**ரிஷபம்**

குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.



**மிதுனம்**

ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், திருமண வாய்ப்புக்கள் தேடி வரலாம்.



**கடகம்**

பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம்.



**சிம்மம்**

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.



**கன்னி**

இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கடன் சுமை குறையும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள்.



**துலாம்**

நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.



**விருச்சிகம்**

வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.



**தனுசு**

சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.



**மகரம்**

குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, எடுத்த காரியங்களை முடிக்க ஒரு முறைக்கு பல முறை அலைய நேரிடலாம்.



**கும்பம்**

குடும்ப மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், தனவரவுகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.



**மீனம்**

புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**துன்பங்களை சந்திக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வியே இல்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகள் இன்றி வடக்கில் 18,273 பேர்

## காணி ஆணையாளர் சோதிநாதன் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

வடக்கு மாகாணத்தில் 18, 273 பேர் காணிகள் இல்லாமல் உள்ளதாக வடக்கு மாகாண காணி ஆணையாளர் சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

மாகாண மட்டத்திலான பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் உயர்மட்டக் கலந்துரையாடல் கிளிநொச்சியிலுள்ள வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தில் வடக்கு மாகாண ஆளுநரின் பங்கேற்புடன் நேற்று நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநரின் அழைப்பின்பேரில் வருகை தந்துள்ள காணி ஆணையாளர் நாயகம் மற்றும் அவரது குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக நடமாடும் சேவையை முன்னெடுத்தனர்.

குறித்த நடமாடும் சேவையின்போது பிரச்சினைக்குரிய காணிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அரச காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் ஊடாக இந்த ஆண்டு 500 மில்லியன் ரூபா வருமானம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

மேலும் வடக்கு மாகாணத்தில் 18,273 பேர் காணிகள் இல்லாமல் உள்ளனர். இதனை விட வெளிப்படுத்தல் உறுதி மூலமாக சட்டவிரோதமாக காணிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளும் குளங்களின் நீரேந்துப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளும் வடக்கில் நடைபெற்று வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-6)

# தமிழ் வாக்காளர்களே சிந்தித்து வாக்களியுங்கள்

## ஐக்கிய தமிழர் ஒன்றியம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

போராளிகள், பொதுமக்கள் எனப் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்ட எமது மண். இவர்கள் அனைவரும் உயிர் தியாகம் செய்தது தமிழ் தேசிய இருப்புக்காக தமிழர் சந்ததியின் இயல்புக்காக என்பதை தமிழ் மக்கள் மறந்துவிடக்கூடாது என ஐக்கிய தமிழ் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் சுயேட்சைக் குழுக்களை ஒன்றிணைத்து தேர்தலை எதிர்கொள்ளும் அவ் அமைப்பு விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது, அன்பார்ந்த தமிழ் வாக்காளப் பெருமக்களே! நம் மண்ணின் வரலாற்றைத் திரும்பிப் பாருங்கள். தென்பகுதிக் கட்சிகள் காலங்காலமாக நம்மினத்தை அரசியல், பொருளாதார ரீதியாக அடக்கிஒடுக்கிவந்த வரலாற்றைத் திரும்பிப் பாருங்கள். வடக்கையும் கிழக்கையும் சட்டரீதியாகப் பிரித்து வைத்துள்ளவர்களை அடையாளம் காணுங்கள். 1000 விகாரைத்திட்டங்களின் கீழ் பௌத்த மக்கள் இல்லாத இடங்களில் சட்டவிரோதமாகக் விகாரைகளைக் கட்டியவர்களுக்காக வாக்களிக்கப் போகிறீர்கள்?

ஏற்கனவே அடகு வைத்தவற்றை மீளப்பெற முயற்சியுங்கள். சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்துங்கள். எம்மினத்தைக் குண்டு போட்டுக் கொத்துக் கொத்தாக அழித்தவர்களை ஆதரிக்கப் போகிறீர்களாக? எனவே மக்களாகிய நீங்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

உங்கள் வாக்குகள் அனைத்தும் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த்தேசிய கட்சிகளிற்கே என்பதை தீமானித்துக் கொள்ளுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை ஶ்ரீமத் வாலாம்பிகா சமேத ஶ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோயில் (வண்ணை வைத்தீஸ்வரன்) வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து மஹோற்சவங்கள் இடம்பெற்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெற்று, மறுநாள் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா க.வைத்திலிங்கச் செட்டியார் தெரிவித்துள்ளார். (நி-6)

# இளவாலையில் மகளிர் தினம்


(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் மகளிர் தின நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இளவாலை Dr.மோகன் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இளவாலை மகளிர் அணி தலைவி ர.சுகீர்த்தனா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் நே.செல்வகுமாரி கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

# சீன சொக்லேட்; தண்டம் விதித்த மன்று




(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட சீன சொக்லேட் வகைகளை விற்பனைக்கு வைத்திருந்த மானிப்பாய்க் கடை உரிமையாளருக்கு 64 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட மானிப்பாய் பொது சுகாதார பரிசோதகர் கி.அஜந்தன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது அனுமதியற்ற வகையில் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்டு உரிய சுட்டுதுண்டுகள் இன்றி சீன சொக்லேட் வகைகளை விற்பனைக்கு வைத்திருந்தமை கண்டறியப்பட்டது.

ஊசி மருந்து மற்றும் சைனேட் குப்பி வடிவங்களில் இருந்த சொக்லேட் வகைகளை சான்றுப் பொருட்களாக கைப்பற்றிய சுகாதாரப் பரிசோதகர், கடை உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை கடை உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து அந்நபருக்கு கடுமையாக எச்சரிக்கை விடுத்ததுடன் மன்று 64 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்தது. (6-33)

# கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் 8 மோ. சைக்கிள்களைப் பந்தாடியது

## சாவகச்சேரியில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர வளைவுப் பகுதியில் நேற்று முன்தினம் காலை ஹயஸ் வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களுடன் மோதி விபத்துக்குள்ளானதில் எட்டு மோட்டார்சைக்கிள்கள் சேதமடைந்திருப்பதுடன் பொதுமகன் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

திருகோணமலைப் பகுதியில் இருந்து யாழ். நோக்கிச் சென்ற ஹயஸ் வாகனமே கடந்த புதன்கிழமை காலை 6 மணியளவில் சாவகச்சேரி நகர வளைவுப் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிச் சென்று விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன் போது வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எட்டு மோட்டார் சைக்கிள்களை மோதி சேதப்படுத்தியுள்ளது. இருப்பினும் வாகனத்தில் பயணித்தவர்களுக்கு காயங்கள் ஏற்படவில்லை எனவும் பொது மகன் ஒருவர் சிறு காயங்களுக்கு இலக்காகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச் சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(6-8-30)

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் எதிர்வரும் 25இல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமானது எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடற்றொழில் , நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான இரா. சந்திரசேகர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட செயலக ஊடகப்பிரிவு நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக்குறிப்பிலே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. (6-8)

# தேகாந்த நிலையில் கலைமாணிப்பட்டம்

(யாழ்ப்பாணம்)


யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் கல்வி கற்று, கற்கை நெறியைப் பூர்த்தி செய்த பின்னர் சுகவீனம் காரணமாக மரணமடைந்த மாணவி ஒருவருக்குத் தேகாந்த நிலையில் கலைமாணிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவின் மூன்றாம் நாள், முதலாவது அமர்வின் போது சுபீனா குணரத்னம் என்ற மாணவி கலைமாணிப் பட்டத்துக்கு உரித்துடையவராக் கப்பட்டமையை உறுதிப்படுத்தி தேகாந்த நிலையில் அவரது பட்டம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. (நி-6)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழில் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்ற பௌத்த துறவி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழில் பட்டப்பின் டிப்ளோமாவைப் பயின்று பௌத்த துறவி ஒருவர் பட்டம் பெற்றுள்ளார்.

யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று, 21 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவின் மூன்றாம் நாள், முதலாவது அமர்வின் போது சன்னாஸ்கம இந்திரானந்த தேரர் என்ற பெயருடைய பௌத்த துறவியே, உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினால் நடத்தப்பட்ட தமிழில் பட்டப்பின் தகைமைக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து பட்டம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவினால் சம்பிரதாய பூர்வமாக இவரது பட்டம் கையளிக்கப் பட்டது. (நி)

# ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்று முன்தினத்துடன் ஒப்பிடும் போது நேற்று மேலும் குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது நேற்று முறையே 292.25 ரூபாவாகவும், 300.75 ரூபாவாகவும் உள்ளது. நேற்று முன்தினம் வியாழக் கிழமை அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது 292.18 ரூபாவாகவும், 300.68 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது. (நி)



புன்னாலைக் கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளி மாணவர்களின் சந்தை நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது...


## வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம்
## மாலுசந்தி அல்வாய் கிழக்கு, அல்வாய்

**பகிரங்க ஏலவிற்பனை**

நிறுவனத்தின் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட பொருட்களான இரும்பு, இலத்திரனியல் உதிரிப்பாகங்கள், மரம் போன்றன பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

**காலம் : 28.03.2025 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி**
**இடம் : வடமராட்சி நல்லொழுக்க நிறுவன அலுவலகம்**

**நிபந்தனைகள்:-**

1. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை நேரில் பார்வையிடலாம் (26-27/03/2025)
2. தெரிவு செய்யப்பட்ட ஏலதாரர்கள் அன்றைய தினமே பி.ப 3.00மணிக்கு முன்னதாக கோரப்பட்ட ஏலத்தொகையினை முழுமையாகச் செலுத்தி பொருட்களை உடன் அகற்ற வேண்டும்.
3. மேலதிக விபரங்களை நிறுவன முகாமையாளர்/செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-2512)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின்
39 ஆவது பட்டமளிப்பு விழாவில்
*கல்வியில் முதுதத்துவமாணி*
(M.Phil.in Education)
பட்டத்தை பெற்றுக் கொண்ட
எமது பாலர் பகல் விடுதியின்
உப தலைவரும் கோப்பாய் ஆசிரியர்
கலாசாலை விரிவுரையாளருமாகிய

**திரு. பொன்னுத்துரை சற்குணநாதன்**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதில்
மகிழ்வடைகின்றோம்.

வாழ்த்துவோர்
**பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும், நீர்வேலி.**

(C-2510)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி.
**சோபியாலினி எட்வின் ராஜ்குமார்**
கல்வியியல் முதுமாணி (MEd)

யா/ ஏழாலை தெற்கு
அமெரிக்கன் மிஷன் தமிழ்
கலவன் பாடசாலை அதிபர்
**திருமதி.சோபியாலினி எட்வின் ராஜ்குமார்** அவர்கள்
20.03.2025 அன்று நடைபெற்ற
39 ஆவது பொதுப் பட்டமளிப்பு
விழாவில்
**கல்வியியல் முதுமாணிப் பட்டம்**
(MEd) பெற்றதையிட்டுப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்
**ஆசிரியர் கழகம்,**
**யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை.**

(3713)



## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா:16
7 இல் செவ்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: HND in IT, தொழிலதிபர் (uk)
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/15240

பிறப்பு: 1964 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா:75
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: MBBS, Doctor (கனடா)
எதிர்பார்ப்பு : தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/15241

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம் : மிருகசீரிடம்
கி.பா:41 1/4
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: BSc, Teacher
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15244

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு : 1996 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
2 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, Instructure
எதிர்பார்ப்பு: Doctor, Engineer.
தொ.இ: G/15261

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா:32 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, QS
எதிர்பார்ப்பு : அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15264

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: அத்தம்
7 இல் செவ்
கி.பா: 33
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்
தொ.இ: G/15265

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/யாழ்.இந்து ஆரம்ப

## உயர்திரு. பேரம்பலம் தனபாலசிங்கம் அ



### வட மாகாண ஆளுநரின் வாழ்த்துச் செய்தி

திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள் ஆசிரியப் பணியைத் தனது பணியாக ஏற்றுக் கொண்டு பின்பு 2013 ஆம் ஆண்டு அதிபராகப் பதவி உயர்வு பெற்று சமூகத்தையும் மக்களையும் நேசிக்கின்ற ஒருவராகத் தனது கல்விச் செயற்பாடுகளைச் செவ்வனே ஆற்றி வந்தவர். அவர் ஆசிரியர்களையும், மாணவர்களையும் அன்போடு அரவணைத்து அவர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் கல்விசார் பாடவிதானச் செயற்பாடுகளைச் செவ்வனே தனது பணிக்காலத்தில் நிறைவேற்றி வந்தவர். இதனால் அனைவரது உள்ளத்திலும் இடம்பிடித்துக் கொண்டவர்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் 2021 ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டு தனது ஓய்வுக்காலம் வரை, பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றி அனைவரது பாராட்டையும் பெற்றவர். அதோடு மட்டுமல்லாது "தேச கீர்த்தி" விருது, தேசிய மட்ட "பிரதீபா பிரபா" விருதுகளைப் பெற்று அரசினால் கௌரவிக்கப்பட்டவர்.

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அளப்பரிய பணியாற்றிய மணிவிழாக் காணும் மாண்புறு பெருமகன் திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள், ஓய்வுக் காலத்தில் மேலும் பல சமய, சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, தமது குடும்பத்தினருடன் இன்றுபோல் என்றும் நிறைவாக வாழ எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நா.வேதநாயகன்,**
ஆளுநர், வட மாகாணம்.



### யாழ். அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

"கல்வி அழகே அழகு" என்கின்ற அர்த்தமுள்ள மகுட வாசகத்தைச் செப்பி நிற்கின்ற இப்பாடசாலையின் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும். உயர்ச்சிக்கும் மிகுந்த அக்கறையுடனும், முனைப்புடனும் செயற்பட்டவர் திருவாளர் பேரம்பலம் தனபாலசிங்கம் என்பதனை யாராலும் மறுத்துவிட முடியாது. மேலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் சாரணர் செயற்பாடுகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களின் வெற்றிக்கு வித்திட்ட ஒருவர் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை.

இப்பாடசாலையில் கல்வி கற்ற பல மாணவர்கள் சமூக மட்டத்தில் உயர்ந்து விளங்குகின்றார்கள் என்பதுடன் இப்பாடசாலையில் நடைபெறுகின்ற அனைத்து நிகழ்வுகள், அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலைக்கும் சமூகத்திற்குமிடையில் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் கட்டமைப்பைச் சரியான முறையில் பேணுவதற்கு இவர் ஆற்றிய பணி பாராட்டத்தக்கது. சிறப்பாகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்களின் மணிவிழா சிறப்புற பாராட்டி அவரது ஓய்வு காலம் சிறப்புடன் அமைய இறைவனை வேண்டி என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**மருதலிங்கம் பிரதீபன்.**
அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.



### மனித நேயம் கொண்ட அதிபர்

திருவாளர் பேரம்பலம் தனபாலசிங்கம் அதிபர் அவர்கள் மனித நேயமும் கடவுள் பக்தியும் ஆளுமையும் மிக்கவர் என்பதை பாடசாலை செயற்பாடுகளில் நான் கண்டு மகிழ்ந்தேன். இப்பாடசாலையில் சேவையாற்றிய அதிபர்கள் தாம் விட்டுச் சென்ற செயற்றிட்டங்களைத் தொட்டுச் செல்கின்ற பண்பு ஒவ்வொரு அதிபர்களிடமும் காணப்பட்டது. அதில் இவரும் ஒரு சாதனை வீரனாக செயலாற்றியது குறிப்பிடத்தக்கது. மாணவர்களிடையே இந்துப் பண்பாட்டையும் சமய ஒழுக்க நெறிகளையும் மேலும் மேம்படுத்துவதற்காக மங்கள நாதப்பெருமானுக்கு வழிபாட்டுத் தலம் அமைத்து மாணவர்கள் அனைவரும் சைவப்பண்பாட்டு விழுமியங்களை கற்பதற்கான ஓர் ஆலயமாக உருவாக்கியமை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வரலாற்றில் ஒரு மாற்ற முடியாத அடித்தளமாகப் பார்க்கின்றேன். அதிபர் அவர்கள் சேவையாற்றிய அத்தனை பாடசாலைகளிலும் தெய்வீகத்தைப் புனிதமாக நேசித்து கற்றல் கற்பித்தல்களில் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதில் அயராது உழைத்தவர்.

பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்தவர். இன்று மணிவிழாக் காண்கின்றார். இவர் தனது பாடசாலைச் சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் தொடர்ந்தும் தன்னலமற்ற சேவையைச் சமூகத்திற்குச் செய்வார் என்பதில் ஐயமில்லை.

அவரது பணிகள் தொடர நீண்ட ஆயுளையும் நல்ல தேக ஆரோக்கியத்தையும் எல்லாம் வல்ல இறைவன் அருள வேண்டி இவரது ஓய்வுக்காலம் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் அமைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சு. தியாகலிங்கம் (ஓய்வு நிலை அதிபர்)**
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

### தலைமைக்குரிய மகுடம்

பள்ளியில் ஒளியாய்
பிரகாசித்தீர்-பாதை காட்டும்
மெழுகுவர்த்தியானீர்
விழிகள் மலர், சிந்தனை பெருக
விரிந்த நெஞ்சத்தில் ஞானம்
விதைத்தீர்கள்-ஒழுங்கின்
வழியை உரைத்திட வாழ்ந்தீர்
உழைப்பின் விழியை
உணர்ந்திடச் செய்தீர்

இன்று ஓய்வென்றாலும்
உங்களால் விதைத்த
அறிவின் விதைகள் என்றும்
நிலைக்கும்-உங்கள் நற்செயல்
மரமாய் வளர- உம்மால்
புகழ் சுவடுகள் தொடரட்டும்

வாழ்வின் புதிய பயணம்
இனிதாகட்டும்-மகிழ்ச்சி
அமைதி வளரட்டும்-அதிபரே!
உம் சேவை மறவோம்-
அன்புடன்
வாழ்த்தி நிற்கின்றோம்.

**பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு.**
**(2022-2025)**
**யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.**



### பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி

சிறுவர்களின் இயல்பான மென்மை நிறைந்த குணாதிசயங்களிற்கும் மனப்பாங்கிற்கும் நடத்தைக் கோலங்களிற்கும் ஏற்றவாறு பாடசாலைச் சூழலை இயற்கை வனப்போடு இணைந்தவாறான பௌதீக வளங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி வகுப்பறைக் கல்வி மற்றும் வெளிக்களக் கற்கையினூடாக மாணவர்களின் கற்றல் திறன், கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவதில் முக்கிய கவனம் கொண்ட ஒரு ஆசானாக இருந்தவர் திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள்.

கடமை புரிகின்ற பாடசாலையும் ஆசிரியர்களும் மாணவர்களும் எப்பொழுதும் ஒரு தெய்வீகச் சூழலுக்குள் வாழவும் சமய கலாசார விடயங்களை கற்றுக்கொண்டு ஒழுகவும் வேண்டும் என்ற விருப்போடு பல ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்ட ஒரு சிறந்த அதிபராக விளங்குகிறார். **"இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள்"** என்ற மையக்கருத்திற்கு மிக முக்கியத்துவம் வழங்கி ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடனும் மிகுந்த புரிந்துணர்வுடனும் சேவையாற்றுவதற்கேற்றவாறு ஆசிரிய வாண்மைவிருத்திப் பண்புகள் தொடர்பான கருத்தரங்குகளை, விழிப்புணர்வு நிகழ்வுகளை ஒழுங்குசெய்து யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் தொன்மையையும் சமய கலாசார மேன்மையையும் குன்றவிடாது முன்னுதாரணமாக விளங்கச் செய்துள்ளார்.

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளுக்கு இணங்க அர்ப்பணிப்போடு அரச பணியில் கடமையாற்றி பணி ஓய்வுக்குள் செல்கின்ற திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள் சிறந்த உடல் உள ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்.

**இ.இளங்கோவன்** (பிரதம செயலாளர்)
வடக்கு மாகாணம்.



### யாழ்.வலயக்கல்வி பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அதிபர் அவர்கள் 16 வருடங்கள் ஆசிரியராகவும் 12 வருடங்கள் அதிபராகவும் கல்விப் பணி செய்து 28 வருடம் தனது பணியினைச் சாதுரியமாகக் கொண்டு செல்வதில் திறமையானவர். அமைதியான சுபாவத்தி னால் எல்லோர் மனங்களிலும் நிறைந்து நிற்கின்ற ஒருவராக இவரை நான் காண்கின்றேன். திருவாளர் தனபாலசிங்கம் அவர்கள் அதிபர் சேவையில் கடமையேற்ற பின்னர், தான் கடமையாற்றிய யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையிலும், யா/இந்து ஆரம்பப் பாடசாலையிலும் தன் காலப்பகுதியிலேயே இப்பாடசாலைகளைச் சிறந்த பாடசாலைகளாக திகழ செய்வதற்கு அரும்பணி ஆற்றியவர் என்பதில் ஐயமில்லை.

அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களைத் தனது அன்பான கண்டிப்பினால் மிகத்திறமையாக வழிநடத்திக் கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஓர் உந்துசக்தியாக விளங்கினார். தனது நிர்வாகத் திறமையினால் ஆசிரியர்களிடையே நன்மதிப்புப் பெற்ற அதிபராக விளங்கினார். தன்னடக்கமும் மற்றையவர்களை மதிப்பதையும் தன்னகத்தே கொண்டவர்.

பூநகரி மண்ணில் பிறந்து தனது பணியில் உயர்வு காட்டி யாழ்.வலயத்தின் கல்விச் சிறப்பிற்கு வித்திட்ட அதிபர்களில் ஒருவர் இவர் என்பதில் ஐயமில்லை. திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள் அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஓய்வுக் காலத்தில் சந்தோசமாக நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**திருமதி.மாலதி முகுந்தன்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



### தெய்வத் திருவருளில் செய்ததென முடித்துரைப்பான்

ஆற்றல் மிகு வல்லான், அறிவுடையான், அன்பு பண்பு மிக்கான், நல்லிதயன், சொல் செயலால் ஒருமித்தன், நல்லதே நாடும் செயல் வீரன், தெய்வத் திருவருளில் செய்ததென முடித்துரைப்பான், எல்லோர் மனதறிந்து ஏற்ற பணி நடப்பான், பட்டறிவும் பகுத்தறிவும் தொகுத்து நிற்க நடை பயில்வான், பட்டம், பதவிகளால் உயர்ந்து நின்ற போதும் பிஞ்சுக்குழந்தைகளின் கல்வித் தடையகற்றி முன்னெழுந்து நிற்க முழுமூச்சு மாமனிதன். முடி சூடி நின்ற ஆரம்பப் பள்ளியெங்கும் அற்புதமும் அழகொளிர, மகிழ்வெய்தி, அருந்தெய்வ நடமாடும் புனிதத்தை பள்ளியெங்கும் அள்ளித் தெளித்த செயல் வீரன், மனம் தொட்டு சேவைகளை, மகிழ்ந்தளிக்க ஆசிரியரை மலரணையில் ஏற்றி, மாசற்ற சேவை உழைப்பதனால் யாழ். இந்து ஆரம்ப அன்னையை நான் காண்டு பணியில் புதுமையும் புகழும் புத்தெழுச்சியும் கொடுத்து, கோபுர உச்சி கலசத்தில் ஏற்றிக் கீழிருந்து எல்லோரும் அண்ணாந்து உற்றுப் பார்க்க வைத்த பேரழகன் இவன்.

இத்தகைய பெருந்தகையின் மணிவிழா நாளில் பெருமையுடன் பேரும் புகழும் மகிழ்வும் என்றென்றும் செழித்தோங்க வாழ்க வளமுடனும் நலமுடனும் என்று கொண்டலடியானை பிரார்த்தித்து வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

**வே. [illegible]**




## பேரம்பலம் தனபா

(SLPS I, Sp.Trd Agr, B.A, B.Ed, Di

**சேவை விபரம்**

| | |
|---|---|
| கிளி/செம்பன்குன்று அ.த.க பாடசாலை | - |
| பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | - |
| யா/ வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் | - |
| யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி | - |
| யா/ வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் | - |
| யா/ சென் மேரிஸ் வித்தியாலயம் | - |
| யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை | - |
| யா/ யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை | - |



### சிவகுரு ஆதீன சுவாமிகளின் ஆசிச் செய்தி

பிறவிகளிலே மனிதப்பிறவி எடுத்தல் என்பது அரிதினும் அரிது; அபூர்வமானது; மகத்துவமானது; ஈடு இணையற்றது. அதிலும் பிறருக்காக வாழ்ந்து மகிழ்ச்சி அடைவது என்பது ஓர் அரிய தவமாகும். அந்த வகையில் ஆசிரியப் பணியை "என் கடன் பணி செய்து கிடப் பதே"(அப்பர் தேவாரம்) என தலை மேற்கொண்டு 1996 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை, 29 வருட காலமாக ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றிய திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்களது பணி சாலச்சிறந்தது. திரு.பே.தனபாலசிங்கம் அவர்கள் மிக நெருக்கடியான காலகட்டத்திலும் தமது சேவையைத் திறம்பட ஆற்றியமை மிகப்பெரும் பணியாகும்.

இவ்வண்ணம் ஆசிரியப்பணியை ஆற்றிய அன்னாரின் சேவை அனை வருக்கும் முன்மாதிரியாகும். கற்பித்தலை நவீனமயப்படுத்து முகமாக நூலகத்தை கணனிமயப்படுத்தியமை, மாணவர் தலைவர்களுக்கான பயிற்சியை வழங்கியமை சிறப்புடையதாகும். யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் அதிபராகப் பணியாற்றிய காலத்தில் தரம் 5இல் புலமைப்பரிசில் பரீட்சையில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றமையும், 60% இற்கு மேற்பட்ட மாணவர்களை சித்தியடையச்செய்தமையும் சாதனைகளாகும். பாடசாலை பௌதிகச்சூழல், வகுப்பறை, கவிநிலை போன்றவை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் என அறிந்து, அதற்கேற்ப பாடசாலையை அழகுற அமைத்துள்ளமை சிறப்பம்சமாகும். இவர் பெற்ற விருதுகளான தேசியமட்டப் பிரதீபாபிரபா, தேசகீர்த்தி, சமாதான நீதவான் போன்றவை இவரது தன்னலமற்ற பணிகளுக்கானவையாகும்.

அந்த வகையில் திரு.பே.தனபாலசிங்கம் அவர்கள் தமது ஓய்வுக்காலத்தை சமுதாய நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும் என்பது எமது அன்பான வேண்டுகோளாகும். அன்னார் தனது குடும்பத்தினருடன் நீண்ட ஆயுளுடன், தேக ஆரோக்கியத்துடன், மன அமைதியுடன், ஆன்மீகநெறியில் வாழ ஆசி வேண்டி எல்லாம் வல்ல நல்லைக் கந்தப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**தவத்திரு வேலன் சுவாமிகள்** (ஆதீனமுதல்வர்)
சிவகுரு ஆதீனம்,நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரம்ப பாடசாலை அதிபர்
# ம் அவர்களின் மணிவிழாச் சிறப்புமலர்



## னபாலசிங்கம் J.P
## B.Ed, Dip.in Human Rights, DSM)

| | | | |
|---|---|---|---|
| | - | ஆசிரியர் | (17.06.1996 - 22.03.1998) |
| | - | ஆசிரியர் | (23.03.1998 - 28.03.2000) |
| யம் | - | ஆசிரியர் | (29.03.2000 - 10.09.2004) |
| | - | ஆசிரியர் | (11.09.2004 - 27.04.2005) |
| யம் | - | ஆசிரியர் | (28.04.2005 - 03.05.2005) |
| | - | ஆசிரியர் | (04.05.2005 - 06.01.2013) |
| ம | - | அதிபர் | (07.01.2013 - 04.01.2021) |
| | - | அதிபர் | (04.01.2021- 22.03.2025) |




### செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் அரியாசனத்தை அலங்கரித்த உயர்திரு.தனபாலசிங்கம் அவர்களின் மணிவிழாக் குறித்து ஆசி வழங்குவதில் ஆனந்தம் அடைகிறேன். பக்தியும், பண்பும் மற்றும் ஆளுமையும் நிறைந்த அதிபர் அவர்கள் இப் பாடசாலையின் வளர்ச்சிக்குத் தன்னாலான பங்களிப்பை வழங்கியுள்ளார்.

அவரது சேவைக்காலத்தில் பாடசாலையின் பெறுபேறுகள் உன்னத நிலையில் சிறப்புப் பெற்றுள்ளது. வடக்கில் முதன்மை நிலை வகிக்கும் இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் பதவி என்பது மிகவும் பெருமைக்குரியது. அதனைச் சிறப்பாகப் பேணிய அதிபர் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் நல்ல ஆரோக்கியத்தோடு நிறைவாக வாழத் துர்க்கை அம்பாளை பிரார்த்தித்து அன்னாரின் சேவையைப் பாராட்டி விழா எடுக்கும் விழாக் குழுவினருக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்,** தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.



### பிரதம குருவின் ஆசிச்செய்தி

எமது பாடசாலை அதிபர் திரு. பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள் அமைதியான குணமும் நிறைந்த ஆளுமையும் மிக்கவர். தன்னுடைய பாட சாலைக் காலத்தில் பழையன கழித்து புதியன புகுத்தி பாடசாலையை மிகுந்த அழகுற ஆக்கியவர். மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் மேலும் பல படிகள் முன்னேற சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.

அவரது சிறந்த வழிகாட்டலின் கீழ் ஆசிரியர்களும் மாணவர்களும் சிறப்பாக செயற்பட்டு பாடசாலைக்கு நன்மதிப்பைப் பெற்றுக் கொடுத்தார்கள். இவ்வாறான பல்வேறு சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட அதிபரின் ஓய்வு காலம் சிறப்புற அமைய கொண்டலடி விநாயகப் பெருமானை வேண்டி ஆசி கூறுகிறேன்.

**பா. பாலகணேஷக் குருக்கள்** (பிரதம குரு)
கொண்டலடி விநாயகர் தேவஸ்தானம்.



### மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

பாடசாலைகளின் செயற்பாடுகளின் வெற்றியானது அப் பாடசாலையின் அதிபரின் தலைமைத்துவப் பண்பிலேயே பெரிதும் தங்கியுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நல்ல தலைமைத்துவப் பண்புடன் அர்ப்பணிப்பும் கிடைக்கும் போது அப் பாடசாலைகள் வேகமாக முன்னேற்றப் பாதையில் செல்வதனை நாம் அனுபவத்தினூடாகக் காண்கின்றோம்.

வெற்றி பெற்ற, வெற்றி பெறுகின்ற பாடசாலைகளைப் பார்க்கின்ற போது அப் பாடசாலைகளின் தலைமைத்துவம் மற்றையோரால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற, விரும்புகின்ற தலைமைத்துவமாக உள்ளமையைக் காணலாம். தலைமைத்துவம் தொடர்பாகக் காலத்திற்குக் காலம் பல கொள்கைகள் உருவாகியுள்ளன. எவ்வாறாயினும் நல்ல ஒரு தலைவன் தானாக உருவாகுகின்றானா? அல்லது உருவாக்கப்படுகின்றானா? என்பது இன்றுவரை விமர்சனத்திற்கு உரியதாகவே உள்ளது. இந்த வகையில் இவர் அதிபராகப் பணிபுரிந்து தலைமை தாங்கிய பாடசாலைகளை நோக்குகையில், தொடர்ச்சியாகப் பாடசாலையின் பௌதீக வளங்களின் அதிகரிப்பு, நவீன கற்றல், கற்பித்தல் சாதனங்களின் பாவனை பாடசாலையில் அதிகரிப்பு, ஆசிரியர்களுக்கு முறையான கற்றல், கற்பித்தல் வழிகாட்டல்கள், சிறந்த சமூகத் தொடர்பு போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான சிறந்த வழிப்படுத்தல்கள் ஊடாகக் கடந்த காலங்களில் மாணவர்களின் பெறுபேறுகளில் வளர்ச்சி கண்டமை மட்டுமன்றி பல்வேறு பட்ட போட்டிகளில் அதிக வெற்றிகள் உள்ளிட்ட பல்வேறு மாணவர்களின் அறிவுத் திறன் சார்ந்த விடயங்களினும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளினும் பாடசாலை வளர்ச்சிப் போக்கைக் காட்டுவதற்கு வழிகாட்டியாக விளங்கியமையைக் காணமுடிகின்றது.

இந்த வளர்ச்சிகளை நோக்குகையில் பாடசாலையின் அதிபராக இருந்து மணிவிழாக் காணும் திரு பே.தனபாலசிங்கம் அவர்களது ஆற்றல்களைக் கண்டு மெச்சுகின்றேன். திரு பே.தனபாலசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தின் இரண்டு பிரபலமான ஆரம்பப் பாடசாலைகளில் அதிபராகப் பணிபுரிந்து பாடசாலையின் சாதனைகள் பலவற்றின் தலைவனாக மணிவிழாக் கண்டு ஓய்வு பெறுகின்றார். அவரின் ஓய்வுக் காலம் சிறப்புற அமைய வாழ்த்துகிறேன்.

**க.பிறட்லி ஜெனாட்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.




### அளப்பரிய சேவை ஆற்றியவர்

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய பே.தனபாலசிங்கம் அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்!

அதிபர் பதவிக் காலத்தோடு சேர்ந்த அஞ்சல் ஓட்டம் அதனை மிகவும் திறமையாக செய்து முடித்துள்ளார்.

2021 முதல் இப்பாடசாலையைச் சிறப்பாக வழிநடத்தியுள்ள அவர், முன்னர் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையிலும் அதிபராகப் பணியாற்றியுள்ளார். 13 ஆண்டுகளாக இலங்கை அதிபர் சேவையிலும், 16 ஆண்டுகள் ஆசிரியர் சேவையிலும் பணியாற்றிக் கல்வித்துறைக்குச் சேவை செய்த இவர், அதிபராக இருந்த காலத்தில் பாடசாலையின் முன்னேற்றத்திற்கும் மாணவர்களின் வளர்ச்சிக்கும் சிறந்த பங்களிப்பை அளித்துள்ளார். சகோதரத்துவத்துடன் அவருடன் இணைந்து பணி செய்யக் கிடைத்த சந்தர்ப்பங்கள் என்றும் மகிழ்ச்சியானவை. இன்று ஓய்வு பெறும் தனபாலசிங்கம் அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியும் நலனும் நிறைந்ததாக அமைய வாழ்த்துகின்றோம்! அவரது சேவையும் பணியும் எப்போதும் நினைவுகூரப்படும். நீண்டகாலமாகக் கல்வித்துறைக்கு அளித்துள்ள அவரது பங்களிப்புக்கு நன்றி!

**நா.மகேந்திரராஜா,** முன்னைநாள் அதிபர்.



### அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர்

அதிபர் தனபாலசிங்கம் அவர்களை கடந்த 10 வருடங்களாக நன்றாகத் தெரியும். மிகவும் அர்ப்பணிப்பான அதிபராகத் திகழ்ந்தவர். தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் வல்லமை உள்ளவர். மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாடசாலைச் சமூகத்தையும் ஒன்று சேர அரவணைத்துச் செல்லும் பக்குவம் நிறையவே உண்டு.

ஆன்மிகத்தில் நிறைந்த ஆர்வமுள்ளவர்.அதனாலேயே இரண்டு பாடசாலைகளிலும் மாணவர்கள் மத்தியில் ஆன்மிகத்தை வளர்க்க அரும்பாடுபட்டார். உண்மையில் வெற்றிகரமான சிறந்த தலைமைத்துவத்தை வழங்கிய அதிபர் . அவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய மனதார வாழ்த்துகிறேன்

**ச.சுகிர்தன்,**
பாடசாலை நிறைவேற்றுக்குழு உறுப்பினர்.



### நல் வழிகாட்டிய அதிபர்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் சிறந்த அதிபராக வலம் வந்து பாடசாலையின் நலனுக்காகவும் வெற்றிக்காகவும் அயராது உழைத்தவர் எங்கள் அதிபர். பக்தியிலும் ஒழுக்கத்திலும் அறிவிலும் சிறந்து விளங்கியதோடு நின்றுவிடாது மாணவர்களும் பக்தியிலும் ஒழுக்கத்திலும் கல்வியிலும் சிறந்து விளங்கப் பல வழிகளைக் காட்டி நின்றவர்.

கல்வியோடு மட்டும் நின்றுவிடாது, நுண்ணறிவு சார்ந்த திறன்களை வளர்ப்பதற்கு சதுரங்க வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தது மட்டுமன்றி மாணவர்களின் உடல் , உள ஆரோக்கியம் கருதி டென்னிஸ், சாரணியம், Ucmas, முதுலுதவி, செயற்பட்டு மகிழ்வோம் போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளைப் பயிற்றுவித்து தேசியம் வரை போட்டிகளில் பங்குபற்றி வெற்றி யீட்டுவதற்கு ஊக்குவித்தவர் எங்கள் அதிபர்.

மாணவர்கள் நலன் கருதி பாடசாலைச் சமூகத்தையும் பழைய மாணவர்களையும் உள்வாங்கி,பௌதீக வளத் தேவைகளையும் பூர்த்தி செய்தார். இன்று அகவை அறுபதில் கால் பதித்து மணி விழாக் காணும் எங்கள் அதிபரை வாழ்க வாழ்க என வாழ்த்தி நிற்கின்றேன்.

**திருமதி. [illegible]**
தலைவர், ஆசிரியர் நலன்புரிக்கழகம்.



### முல்லைத்தீவு அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி


யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அதிபராக அளப்பரிய பணியாற்றி அறுபதாவது அகவை காணும் திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள் 1996 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைந்து 16 வருடங்கள் பல பாடசாலைகளில் ஆசிரியராக மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியதுடன் 2013 ஆம் ஆண்டு அதிபராக பதவி உயர்வு பெற்று கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையிலும் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையிலும் சுமார் 12 வருடங்கள் குறித்த பாடசாலைகளை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்ற ஓர் ஆளுமையுள்ள அதிபராக அர்ப்பணிப்போடு சேவையாற்றியதை நான் அறிவேன்.

குறிப்பாக நான் கல்வி கற்ற யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வளர்ச்சியில் பல அதிபர்கள் அர்ப்பணிப்போடு சேவையாற்றியுள்ளார்கள். அவர்களின் வரிசையில் கடந்த நான்கு ஆண்டுகளாக திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள் அதிபராக ஆற்றிய பணி மகத்தானது. குறுகிய காலத்தில் மாணவர்களின் கல்வி மற்றும் ஒழுக்க மேம்பாட்டிற்காகவும், மாணவர்களின் ஆளுமை விருத்திக்காகவும், பாடசாலையின் உட்கட்டமைப்பு வளர்ச்சிக்காகவும் பல்வேறு செயற்பாடுகளை அவர் மேற்கொண்டமை பாராட்டுக்குரியது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து மணிவிழாக் காணும் பேரன்புக்குரிய திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைவதற்கும் ஓய்வுக் காலத்திலும் சமுதாயத்திற்கு பயனுள்ள பணிகளை ஆற்றி குடும்பத்துடன் என்றும் நலமாக வாழ எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ.உமாமகேஸ்வரன்,** அரச அதிபர்,
முல்லைத்தீவு.



### பெருமை சேர்த்த அதிபர்

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி மணிவிழாக் காணும் அதிபர் திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்களின் சேவையினைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எமது நல்லூர் கோட்டத்தில் அதிகளவு மாணவர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மற்றும் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் பல்வேறு வளர்ச்சிகளிற்கு கடும் பணியாற்றி இன்று சேவை ஓய்வு பெறும் இவர் எமது கோட்டத்தின் செயற்பாடுகளினும் தன்னாலான பணியை வழங்கியதுடன் இரண்டு பாடசாலைகளின் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை உயர்வடையச் செய்வதில் முன்னின்று பணியாற்றியுள்ளார்.

அண்மையில் வெளிவந்த புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றில் வடமாகாணத்தில் அதிகூடிய புள்ளியைப் பெற வழிகாட்டி, பாடசாலைக்கும் எமது கோட்டத்திற்கும் வலயக்கல்வித் திணைக்களத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். இவரின் ஓய்வுக்காலம் சிறப்புடன் அமைய வாழ்த்துகின்றேன்.

**திரு. இரத்தினராசா ஜெயகரன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,நல்லூர்.



### பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் புகழ் பூத்த அதிபர்கள் வரிசையில் அதிபர். பே.தனபாலசிங்கம் அவர்கள் பாடசாலையை மென்மேலும் உயர்வடையச் செய்தவர்.

தனித்துக் கற்றல் செயற்பாடுகளில் மட்டுமன்றி, இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் அதிபர் தனபாலசிங்கம் அவர்கள் கொண்டிருந்த கரிசனையும் ஈடுபாடும் எமது பாடசாலை மாணவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சாதனை படைத்து எமது பாடசாலைக்குப் பெருமை சேர்க்க வழிவகுத்தது.

பாடசாலையின் பௌதிக வளங்களை கவின் நிலையில் வைத்திருப்பதில் அதிபர் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடு அனைத்து நிலைகளிலும் எமது பாடசாலையை உன்னதப்படுத்தியது.

இத்தகு ஆளுமை மிக்க அதிபர் பே. தனபாலசிங்கம் அவர்களின் ஓய்வுக் காலம் மிகச் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

**திருமதி.லதாநந்தினி சிவபாதம்,**
பிரதி அதிபர்,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.



### உதவி அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபராகக் கடந்த நான்கு ஆண்டுகள் கடமையாற்றிய பே. தனபாலசிங்கம் அவர்களின் காலத்தில் எமது பாடசாலை பல வழிகளிலும் உயர்ந்த பெறுமானத்தைப் பெற்றுள்ளது.

எல்லோரையும் ஒருங்கிணைத்து பாடசாலை முகாமைத்துவத்தை மிகச் சிறப்பாக நடத்திய அதிபர் அவர்கள் எமக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார்.மிகவும் அமைதியாக இருந்து அனைவருக்கும் உரிய மதிப்பை அளித்து பாடசாலை நிர்வாகத்தை சிறப்பாக நடத்தியவர் என்ற பெருமைக்குரியவர்.

எதையும் நிதானமாகச் சிந்தித்துச் செயலாற்றும் அவரின் முகாமைச் சிறப்பு பாடசாலை வளர்ச்சிக்கு பெருந்துணையாய் அமைந்தது.எமது பாடசாலையை கண்ணியமாக வழிப்படுத்திய அவரின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய கொண்டலடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

**திருமதி. வினோதா விஜயசுந்தரம்,**
உதவி அதிபர். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 160 | 180 | 150-200 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 600 | 500 | 450-500 | 600 |
| தக்காளி | 180 | 180 | 250 | 180-200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 150-220 | 200 |
| கோவா | 300 | 300 | 300 | 250 | 350 |
| கரட் | 600 | 600-700 | 800 | 500 | 600 |
| பூசணி | 140 | 100 | 140 | 80-120 | 150 |
| புடோல் | 150 | 180 | 150 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 150 | 70-100 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-250 | 300 | 80-220 | 150 |
| பெரிய வெங்காயம் | 180 | 170 | 180 | 140 | 150 |
| பாகற்காய் | 400 | 450 | 600 | 400-450 | 400 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 260 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 180 | 100 | 100-150 | 200 |
| லீக்ஸ் | 300 | 350 | 250 | 230 | 300 |
| பீற்றூட் | 150 | 200 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 800 | 500 | 500 | 500-600 | 600 |
| முருங்கைக்காய் | 2300 | 2500 | 1500 | 1500-2200 | 2400 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 180 | 130 | 100 | 150 | 200 |
| கீரை – 1 பிடி | 140 | 120 | 150 | 60-70 | 100 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 150-200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 200 | 150-200 | 220-250 |
| இராசவள்ளி | 650 | 400 | 400 | 400 | 450 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | 150-200 | 200 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 100 | 100 | 50 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 100 | 100 | 220 |

# இலங்கையைப் பாராட்டிய இந்து- பசுபிக் கட்டளை அதிகாரி



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமாரதிஸா நாயக்க மற்றும் ஐக்கிய அமெரிக்க இந்து - பசுபிக் கட்டளையின் கட்டளை அதிகாரி அட்மிரல் செமுவேல் ஜே.பபாரோ ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்திற்கு பாராட்டுத் தெரிவித்த அதே நேரம், இந்து சமுத்திர வலயத்தை பாதுகாத்து அமைதியான இந்து சமுத்திர வலயத்தை பேணுவதற்கு இலங்கை வழங்கும் ஒத்துழைப்பையும் அட்மிரல் பபாரோ பாராட்டியிருந்தார். (ந)

# யாழ்ப்பாண கம்பன் விழா

## ஒரு விமர்சனப் பார்வை

(நேற்றைய தொடர்ச்சி)

விவாத அரங்கு தலைப்பு "கம்ப வருணனைகளுள் முதன்மை பெறுவது" தலைவர்- முனைவர் பாரதி-கிருஸ்ணகுமார். பாரதியைப் பார்க்காமலேயே பாரதியின் வாழ்வை அறிந்தவர். பாரதியின் அரசியல் தெரிந்தவர். பாரதியின் முழுமையை உணர்ந்தவர். தன் பெயருக்கு முன்னால் பாரதியை தன்னுடன் வைத்துக் கொண்டவர்.

**"எல்லா உயிரும் இன்பமெய்துக**
**எல்லா உடலும் நோய் தீர்க**
**எல்லா உணர்வும் ஒன்றாதலுணர்க**

என்ற பாரதியின் வாக்கோடு தன் உரையைத் தொடங்கினார்.

முல்லை நில வருணனையே- பரா.ரமேஸ், குறிஞ்சி நில வருணனையே- கு.பாலசண்முகன், மருத நில வருணனையே-ந.ஐங்கரன், நெய்தல் நில வருணனையே- தெ.ஹர்சன், பாலைநில வருணனையே இ.சர்வேஸ்வரா- நதிகளின் வருணனையே- பரா.ரதீஸ்.

அருவியின் ஆலோலத்தை எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் கேட்டுக்கொண்டு இருக்கலாம். அதே போன்று கல்வி, கலை, மொழி, அறிவியல், அரசியல், பொருளாதாரம் ஆன்மிகம், வரலாறு, இலக்கியம் போன்ற பாற்கடல்களை அறிவு- படிப்பு என்னும் மத்துக்களால் கடைந்து கடைந்து அமிர்தம் எடுத்திருக்கிறார்கள்.

சம்பவத்தை சரித்திரமாக்குவது பெற்றவர் கையில் இல்லை. பிறந்தவர் கையில் என்பதை நிரூபித்தனர்.

இரண்டாம் நாள் காலை அமர்வு இனிதே நிறைவுற்றது.

இரண்டாம் நாள் மாலை அமர்வில் மங்கல இசையை திரு.ப.குமரன் குழுவினர் ரசிகர்களைப் பரவசப்படுத்தி அதேசமயம் அவர்களது உள்ளங்களையும் பண்படுத்தி கச்சேரி கேட்கும் சாதாரண சராசரி நிலையிலிருந்து இன்னும் கொஞ்சம் உயர்த்தி மேம்பட்ட நிலைக்கு ரசனையை வளர்த்து உயர்ந்த நிலைக்கு அவர்களை அழைத்துச் சென்றார்கள்.

விநாயகர் சதுர்த்தி முடிந்ததும் விநாயகரை ஆற்றில் வீசி எறிந்து விடுகிறது மாதிரி அல்லாமல் கம்பன்



குடும்பத்தின் ஆரம்ப உறுப்பினர்கள் இருவர் தம்பதிகள் ஆக மங்கல விளக்கு ஏற்றினார்கள். முகமெல்லாம் கண்களாய் மலர்ந்து நினைவுகள் கண் கசக்குகின்றன.

த.ஜெயசீலன் (பிரதேச செயலாளர்), த.முகுந்தன் (பிரதேச செயலாளர்), உள்ள[illegible]

வைக்கும் அமுதம் உண்ட தேன் குரல் தெவிட்டாத தெள்ளமுது சேர்ந்து உள்ளத்திற்கு அருமருந்தென திரு ர.சுரசாகித்தியன். மதுரமான குரல் அருவிபோல் கொட்டுகிறது. மனம் பஞ்சு போல் இலேசாகிறது கடவுள் வாழ்த்தால். அடுத்து தலைமையுரை ஆற்றிய கௌரவ செல்வம் அடைக்கலநாதன் (பாராளுமன்ற உறுப்பினர்) வெய்யில் அடித்துக் கொண்டே மழை பெய்தது மாதிரி இவர் உரை அமைந்தது. கம்பவாரிதியை சில வேளை பிடிக்கும்- சில வேளை பிடிக்காது என்னும் தொனியில் இவர் உரை அமைந்தது.

வைரங்களை எண்ணும் ஒரு வியாபாரியைப்போல் கவளத்தில் ஒரு பருக்கையும் சிதறவிடாமல் சேர்த்தெடுத்தார். இடுக்கைகளையும் ஏந்தி ஒரு கையும் நிரம்பவில்லை.

தொடக்கவுரை ஆற்றிய கௌரவ சிவஞானம் சிறீதரன் (பாராளுமன்ற உறுப்பினர்) இந்தப் பிரபஞ்சத்தில் எதுவும் [illegible] இன்று காண்பது நாளை மாறலாம். மாற்றமே பரிணாமம். மாறுதல் ஒன்றுதான் உலகில் மாறாது இருப்பது. சுமந்திரனைக் கம்பவாரிதி ஆதரித்தார் மக்கள் அவரை நிராகரித்தனர். வெற்றி, தோல்வி இரண்டுமே மனதின் விகாரங்கள். ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் தோல்வியின் முடிவுதான் வெற்றி, வெற்றியின் முடிவுதான் தோல்வி சூழ்நிலையை வெற்றி கொள்ளும் சூத்திரம் தெரிய வேண்டும். வாழ்க்கையை வாழப்பார் அல்லது வாழ்க்கைக்கேற்ப உன்னை வார்க்கப்பார். "எல்லாம் கற்பனை வாதமே" நீங்கள் மனித குல மீட்சிக்காகப் பேசுகின்றீர்கள் எங்களுக்கோ ஓட்டைப் படகிலிருந்து உடனே மீட்சி தேவை.

நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளராகக் கடமையாற்றிய அ.வாசுதேவா. இலக்கியத்தில் கம்பவாரிதி ஒன்றும் அரை டிக்கற்று அல்ல- ஏதோ தீக்குச்சியில் ஊசலாடும் சின்ன நெருப்பல்ல. தோற்றுப் போவதற்காகவே காற்றோடு யுத்தம் செய்யும் மெழுகு வர்த்தியுமல்ல.

அது ஒரு நிஜ நெருப்பு. கண்ணீரை, புன்னகையை, அனுபவங்களை, அவமானங்களை, விருதுகளை, விரக்திகளை நேற்றை, இன்றைத் தனக்குப் பெற்றோலாய் ஊற்றிக் கொண்டு மனித நேசத்துக்காய் எரியும் மங்காத நெருப்பு என்ற தொனியில் அவர் உரை அமைந்தது.

சிறப்பு நிகழ்வாக தனியுரைப் பொருள் "நயம்பட உரைத்த நா" முனைவர் பாரதி கிருஷ்ணகுமார்.

நயினை.கி.கிருபானந்தா
பொருளாளர்,
யாழ்ப்பாண கம்பன்கழகம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்திற்கு இடையூறு கட்டாக்காலி மாடுகள் பிடிப்பு



(குருமன்காடு)

வவுனியா நகரசபையினால் வீதிகளில் நடமாடித் திரிந்த 50 கட்டாக்காலி மாடுகள் நேற்று முன்தினம் இரவுபிடிக்கப்பட்டன.

வவுனியா நகர எல்லைக்குட்பட்ட வீதிகளில் இரவு மற்றும் பகல் வேளைகளில் நடமாடும் கால்நடைகளால் அதிகளவான விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றது.

இதனையடுத்து நகர சபைக்குள்ள அதிகாரங்களை கொண்டு கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நகர சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வீதிகளில் பொது போக்குவரத்துக்கு இடையூறாக நின்ற 50 இற்கும் மேற்பட்ட கால் நடைகள் நகர சபையினரால் பிடிக்கப்பட்டுள்ள நிலையில் கால்நடை உரிமையாளர்கள் தமது கால்நடைகளுக்குரிய அடையாளத்தினை உறுதிப்படுத்திய பின் தண்டப்பணத்தினைச் செலுத்தி அவற்றை மீளப் பெற்றுச் செல்ல முடியும்.

கட்டாக்காலி மாடு பிடி கூலி ஆயிரம் ரூபாய், தண்டப்பணம் மூவாயிரம் ரூபாய், நாள் ஒன்றிற்கான பராமரிப்புக் கட்டணம் ஆயிரம் ரூபாய் என்பவற்றை செலுத்த வேண்டும். 10 நாட்களுக்குள் உரிமை கோரப்படாத கால்நடைகள் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நகர சபை அறிவித்துள்ளது. (நி-6-250)

# இடையூறாக வீதியில் கொட்டப்பட்ட மணல் மண்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பருத்தித்துறை வீதியில் அம்பன் பகுதியில் சுமார் 200 மீற்றர் வரை கொட்டப்பட்ட மணல் மண்ணினால் பயணிகள் விபத்துக்குள்ளாகும் ஆபத்தான நிலை காணப்படுகிறது.

குறித்த காப்பேற் வீதியில் மணல் கொட்டப்பட்டு இருப்பதால் அவ்வீதியால் பயணம் செய்யும் போது இரு சக்கர வாகனங்கள் சறுக்கல் நிலை ஏற்பட்டு விபத்துக்குட்படக் கூடிய நிலையில் ஆபத்தான நிலை காணப்படுகின்றது.

சட்டவிரோதமாக மணல் கடத்தல்காரர்கள் மணல் மண்ணை ஏற்றிச் செல்லும் போது நடவடிக்கை எடுக்க வேண்டிய தரப்புக்களால் துரத்திச் சென்றவேளை வீதியில் கடத்தல்காரர்கள் மணலை கொட்டிவிட்டு தப்பிச் சென்றிருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது.

பகல் வேளைகளில் ஓரளவு வாகனங்களை செலுத்தக் கூடிய நிலை இருந்தாலும் இரவு நேரங்களில் அவ் வீதியால் பயணிக்கும் போது விபத்துக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.(நி-6)

# காணி பிணக்குகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஆளுநர் கோரிக்கை



(கிளிநொச்சி)

வடக்கு மாகாணத்தில் அரச காணிகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், காணி ஆணையாளர் நாயகம் சந்தனவிடம் கோரிக்கை முன்வைத்தார்.


மாகாண மட்டத்தில் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் உயர்மட்டக் கலந்துரையாடல் கிளிநொச்சியிலுள்ள வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய ரீதியான பிரச்சினை என்ற போதும் வடக்கு மாகாணமே அதிகமாக இப்பாதிப்பை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டிய ஆளுநர், போரால் மக்கள் இடம்பெயர்ந்ததைக் காரணமாக்கி எந்தவொரு அதிகாரிகளுக்கும் தெரியாமல் வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

ஆளுநர் அழைப்பின் பேரில் வருகை தந்துள்ள காணி ஆணையாளர் நாயகம் மற்றும் அவரது குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக நடமாடும் சேவையை முன்னெடுத்தனர்.

இது தொடர்பில் உயர்மட்டக் கலந்துரையாடலுக்கான ஒழுங்குகள் செய்யப்படும் எனவும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் காணி ஆணையாளர் நாயகம் இதன் போது குறிப்பிட்டார். (நி-8)

# துப்பாக்கியுடன் கைதான குடும்பஸ்தர் விளக்கமறியலில்



(நெளுக்களும்)

சட்டவிரோத துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த புதன்கிழமை மாலை கேப்பா. பிலவு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கேப்பாபிலவு பகுதியில் குடும்பப் பிணக்குக் காரணமாக ஏழு நாட்கள் தடுப்புகாவலில் இருந்து விடுதலையாகி நேற்று முன்தினம் வீடு வந்து மது அருந்திவிட்டு சட்டவிரோத துப்பாக்கியை வைத்து மனைவியுடன் சண்டையிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக முள்ளியவளை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்துச் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சட்டவிரோத இடியன் துப்பாக்கியை வைத்திருந்த குடும்பஸ்தரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குடும்பஸ்தரை நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வரை 14 நாட்களுக்கு தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-299)

# சட்டவிரோத வலைகள் கிராஞ்சியில் பறிமுதல்

(தருமபுரம்)

கிராஞ்சிப் பகுதியில் நேற்று முன்தினம் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சட்டவிரோத வலைகள் பெருமளவு மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல கடற்பிரதேசங்களில் சட்டவிரோத வலைகள் மற்றும் அனுமதிப்பத்திரம் பெறப்படாது அமைக்கப்பட்ட கலங்கட்டித் தொழிலில் சில மீனவர்கள் ஈடுபடுவதாகக் கடற்றொழில் சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் குறித்த நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது தங்கூசி மற்றும் கலங்கட்டி வலைகள் அவற்றின் தடிகள் என்பன மீட்கப்பட்டன. குறித்த சான்றுப் பொருட்களைநீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பளார் தெரிவித்தார். (நி-6-318)

# கரைச்சி பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்ட போட்டிகள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலக விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்ட போட்டி நேற்று கிளிநொச்சியில் உள்ள வட மாகாண விளையாட்டு கட்டடத் தொகுதியில் ஆரம்பமானது.

மாவட்ட விளையாட்டுக் கழக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு குறித்த போட்டியை நேற்று ஆரம்பித்து வைத்தனர்.




குறித்த போட்டியில் 14 கழகங்கள் போட்டியிடுகின்றன.

அதேவேளை இறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (நி-6-316)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலக நீர் தினம்

## மார்ச் 22, 2025



அ. அன்ரன் கமிலஸ்.(M.phil)
பொறுப்பதிகாரி, தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம், கிளிநொச்சி.

அனைத்து உயிரினங்களின் தொடக்கம் நீர் என்று உயிரியலும், பூமியில் 71 சதவிகிதம் பரப்பைக்கொண்டது நீர் என்று புவியியலும், இரண்டு பங்கு ஹைட்ரஜன் அணுவும், ஒரு பங்கு ஒட்சிஜன் அணுவும் சேர்ந்ததுதான் நீர் என்று இரசாயனவியலும், நிறமும் மணமும் அற்ற தெளிவான திரவம் தான் நீர் என்று பௌதீகவியலும், மனித நாகரீகத்தின் தொட்டில் என்று வரலாறும், உயிரைப் படைக்க, காக்க, அழிக்க வல்லது நீர் என்று தத்துவமும் கூறினாலும் இந்த நூற்றாண்டில் உலக நாடுகளுக்கு இடையே, ஏன் மனித சமுதாயத்திற்குள்ளே பிளவை ஏற்படுத்தப் போவதும் நீர் என்பதே நிதர்சனமான உண்மை.

### தரைக்கீழ் நீர்

இலங்கையைப் பொறுத்தவரை புத்தளத்தில் இருந்து பரந்தன், முல்லைத்தீவை இணைத்து வரையப்படும் கோட்டிற்கு வடமேற்காகவுள்ள பகுதிகள் மயோசீன் காலச் சுண்ணாம்புப் பாறையமைப்பைக் கொண்டுள்ளன. இப்படிவுகள் தரைக்கீழ் நீரைப் பெருமளவு சேமித்து வைக்கக் கூடிய தன்மை வாய்ந்தவையாகும். சுண்ணக்கல்லை அடிப்படையாகக் கொண்ட செம்மண், செம்மஞ்சள் மணகள் நீரை உட்புக விடும்இயல்பை அதிகளவு கொண்டவையாகவும் அமைந்துள்ளன. மழையால் பெறப்படும் நீர் இப்பகுதிகளில் இலகுவாக உட்புகுந்து தரைக்கீழ் நீராகத் தேங்குகின்றது. உண்மையில் இவ்வாறு செல்லும் நீர் நன்னீர் வில்லையாக உவர்நீரின் மேல்மிதந்து கொண்டிருக்கின்றது. ஆனால் அவை இன்று எமது பல்வேறு செயற்பாடுகளினால் பாதிப்படைந்துள்ளன. குறிப்பாக அதிக தரைக்கீழ் நீர் வெளியேற்றப்படுதல், கரையோர அகழ்வுகள், மழை நீர் தரைக்குக்கீழ் சென்றடைவதைத் தடுத்து கடலை நோக்கி செல்வதை தூண்டுதல், விவசாயத்திற்கான அதிகளவு இரசாயனப் பாவனை, முறையற்ற மலசலக்குழிகள், மற்றும் சீர் ற்ற கழிவகற்றல் முகாமைத்துவம் போன் றவற்றினால் தரைக்கீழ் நீர்வளம் பாதிப் படைந்துள்ளது. ஆய்வுகளின் பிரகாரம் பெரும்பாலான கிணற்று நீர் நேரடியாகக் குடிநீராக பயன்படுத்துவதற்கு உரிய தரத் தில் இல்லை என்பது அறியப்பட்டுள்ளது.

### குடிநீருக்கான நெருக்கடிகள்

புவி மேற்பரப்பில் 71 சதவிகிதம் நீரைக் கொண்டு இருந்தாலும் அந்த நீர்ப் பரப்பில் 97 சதவீதம் உவர் நீராகவும், 3 சதவீதம் நன்னீராகவும் உள்ளது. நன் னீர்ப் பரப்பில் 69 சதவீதம் பனிக்கட்டியால் மூடப்பட்ட பிரதேசமாகவும், 30 சதவீதம் நிலக்கீழ் நீராகவும், மற்றும் 1 சதவீதம் மட்டுமே ஏனைய மேற்பரப்பு நன்னீர் பிரதேசங்களாகவும் அமைந்துள்ளன. பூமியில் கிடைக்க கூடிய நன்னீரில் 0.014 சதவீதம் மட்டுமே மனிதன் பயன்படுத்தக் கூடிய தரத்தில் இருப்பதாக மதிப்பிடப்பட் டுள்ளது. இதன் அளவும் தற்சமயம் குறை ந்து வருகின்றது. இதனால் தான் நீரை அடிப்படை உரிமையாக்கி உள்ளனர்.

உலக நீர் நெருக்கடிக்கான காரணங்களாக பூகோள வெப்பமயமாதல், அளவு கடந்த நீர் பாவனை, நீர் மாசடைதல், வறட்சி மற்றும் சனத்தொகை அதிகரிப்பு ஆகியன முதன்மையானவையாக காணப்படுகின்றன. இதன் விளைவாக உற்பத்திகள் பாதிப்பு, வறுமை, உணவு நெருக்கடி, நோய்ப்பாதிப்புக்கள் போன்றன ஏற்பட்டு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி பாதிப்படையும். இன்று உலகில் 2.1 பில்லியன் மக்களுக்கு இன்னும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை, பாதுகாப்பான நீரின்றி 8 செக்கன்களுக்கு ஒரு குழந்தை என்ற விகிதத்தில் மரணம் நிகழ்வதாகவும், ஆண்டு தோறும் சராசரியாக எட்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் பாதுகாப்பற்ற நீர் மற்றும் போதிய சுகாதாரம் இன்மையால் ஏற்படும் நோய்களால் இறக்கின்றனர் என ஐ.நா அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### உலக நீர் தினம்

பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோ நகரில் 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐ.நா மகாநாட்டின் தீர்மானத்திற்கு அமைவாக மார்ச் 22 ஆம் திகதியை உலக நீர் தினமாக ஐ.நா.பொதுச் சபை பிரகடனம் செய்தது. அதனைத் தொடர்ந்து ஆண்டு தோறும் விசேட தொனிப்பொருளுடன் இத்தினம் நினைவுகூரப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு "அமைதிக்கான நீரை மேம்படுத்துதல்" என்ற கருப்பொருளினையும் இவ்வாண்டு "பனிப்பாறை பாதுகாப்பு" என்பதனையும் முதன்மைப்படுத்தி உலகநீர்தினம் நினைவுகூரப்படுகின்றது.


அந்தவகையில் பனிப்பாறைகள் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் செயன்முறைகளுக்கு அவசியமானவையாகும். வேக மாக உருகும் பனிப்பாறைகள் சமுத்திர நீர் ஓட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் உயிரியல் மற்றும் இயற்கை சம நிலைகளில் ஆழமான தாக்கங்கள் ஏற்ப டுகின்றன. கார்பன் வெளியேற்றத்தில் கட் டுப்பாடு மற்றும் சுருங்கி வரும் பனிப்பாறைகளுக்கு ஏற்ப உள்ளூர் உத்திகள் அவசியம் என்பதுடன் இந்த உலக நீர் தினத்தில், காலநிலை மாற்றம் மற்றும் உலகளாவிய நீர் நெருக்கடியைச் சமாளிக்கும் நமது திட்டங்களின் மையத்தில் பனிப்பாறை பாதுகாப்பை முதன்மைப் படுத்த நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என இவ்வாண்டுக்கான உலக நீர் தினம் தொடர் பான ஐ.நா.சபை அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் உலக நீர் தினம் நினைவுகூரப்பட்டால் மட்டும் போதாது. அதன் தாற்பரியம் பேணப்படல் வேண்டும். மனித வாழ்வோடும் சடங்கு சம்பிரதாயங்களோடும் பின்னிப்பிணைந்தது தண்ணீரின் வரலாறு என்பதை உணர்ந்து செயற்பட கடமைப்பட்டுள்ளோம்.

### தண்ணீர்ப் போத்தல் கலாசாரம்

பிறந்தநாள் கொண்டாட்டம் முதல் மரணச்சடங்குவரை அண்மைக்காலமாக "மினரல் வோட்டர்" என்ற போர்வையில் அரை லீற்றர் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் தாராளமாகக் காட்சிப்படுத்தப்பட்டி ருக்கும். உண்மையில் அவை "மினரல் வோட்டர்" அல்லமாறாக "மினரல் நீக்கப் பட்ட வோட்டர்" என்பதே சரியானது. SLS தரச்சான்றிதழ் பெற்றிருந்தாலும் அவை ஆபத்தில்லை என்பதற்கான உத்தரவாத மேயொளிய ஆரோக்கியமானது என்பதற் கானதல்ல என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு பெற்றுக் கொள்ளும் போத்தலில் உள்ள நீர் முழுமையாக பயன்படுத்தப்படாமல் வீணடிப்பது ஒருவகை நாகரிகமாகப் பின்பற்றப்ப டுகிறது. உண்மையில் அரைலீற்றர் நீரை சுத்திகரிப்பதற்கான செலவில் பார்க்க அந்த போத்தல் உற்பத்திக்கான செலவு அதிகமாகும். இதன்மூலம் வீண்விரயம் செய்யப்படுவது ஒருபுறமிருக்க பிளாஸ்ரிக் போத்தல் கழிவுகள் மூலம் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக யாரும் சிந்திப்பதில்லை. அதற்கு மேலாக போத்தல் நீர் முறையாக பேணப்படாததன் காரணமாக பிளாஸ்ரிக் போத்தலில் உள்ள பதார்த்தங்கள் குறிப்பாக மைக்ரோ பிளாஸ்ரிக் போன்றன நீரில் கலப்புற்று உடலுக்குள் சென்று மூளையின் கலங்களைப் பாதித்து புற்றுநோயினை உருவாக்கக்கூடிய ஆபத்துக்கள் இருப்பதாக அண்மைக்கால ஆய்வுகளில் எச்சரிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை தொடர்பான மூலக்கூறுகளின் நுண் மட்டத்திலான பரிசோதனைகள் எவையும் இங்கு மேற்கொள்ளப்படுவதில்லை என்பது கவலைக்குரியதாகும். அத்துடன் சுகாதாரப்பகுதிக்கு உள்ள உணவுக் கட்டுப்பாட்டு சட்ட நடைமுறைகள் பெரும்பாலும் குடி நீருக்கு பயன்படுத்தப்படுவதில்லை. என்பது பாரிய குறைபாடாகும். "போதையில் உள்ள வரின் குருதியில் உள்ள நம்பிக்கைகைகூட போத்தலில் உள்ள குடிநீரில் இல்லை" என்ற நியாயமான கருத்து நிலவுகின்ற மோசமான நிலைமைக்கு இன்று நாம் உள்ளாகியுள்ளோம்.


### நீருக்கான விழிப்புணர்வு

வருடாந்தம் நீர்த்தேவைகள் அதிகரித்துச் செல்கின்றன எனவே அரிதாக உள்ள வளத்தை மக்கள் தற்போது எவ்வாறு பாவிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே எதிர்கால மக்களின் வாழ்வு அமையுமென குறிப்பிடப்படுகின்றது. குடிநீரைத் தேடி நாளாந்தம் மைல்கணக்கில் நடக்கும் மக்கள் உலகில் வாழ்கிறார்கள் என்பதை பலர் அறியாதுள்ளனர் என்பதே கவலைக்குரியது. எனவே நீர் எங்கள் உயிருக்கு நேர் என்று நாம் கருதி செயற்பட வேண்டும்.



# சிரேஷ்ட பிரஜைகளின் வைப்புக்கு 3 சதவீத மேலதிக வட்டி

## தொழில் அமைச்சர் அனில் ஜயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

சிரேஷ்ட பிரஜைகளின் நலனைக் கருத்திற் கொண்டு அவர்களின் நிதி தேவைமீது கவனம் செலுத்தி 10 இலட்சத்துக்கும் குறைவான அவர்களது வங்கி வைப்புக்காக மேலதிகமாக நூற்றுக்கு 3 சதவீதத்தை வட்டியாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதென தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நிலையியற் கட்டளை 27 இன் 2 கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், சிரேஷ்ட பிரஜைகளின் நலனைக் கருத்திற் கொண்டு அவர்களின் நிதி தேவை மீது கவனம் செலுத்தி 10 இலட்சத்துக்கும் குறைவான அவர்களது வங்கி வைப்புக்காக மேலதிகமாக நூற்றுக்கு 3 சதவீதத்தை வட்டியாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி மேலதிகமான 3 சதவீத வட்டிக்கான நிதி இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் வரவு செலவுத் திட்ட யோசனைக்கு இணங்க எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சிரேஷ்ட பிரஜைகளுக்கான மேலதிக வட்டியை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற மனிதர்களின் அனுபவத்தைக் கூர்ந்து கேட்கும் ஒவ்வொரு முறையும் எனது பணிவு அதிகரிக்கிறது.
~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பட்டப்பகலில் வள்ளலார் விளக்கை ஏந்தி நின்றது ஏன்?

வள்ளலார் என அழைக்கப்படும் இராம லிங்க சுவாமிகள் மிகப்பெரும் ஞானி.

வாடிய பயிரைக் கண்டு வாடினேன் என்று மற்றவர் துன்பத்துக்காக வருந்துகின்ற உயர்ந்த பக்குவத்தைக் கொண்டவர்.

அத்தகு ஞானநிலை கொண்ட இராம லிங்க சுவாமிகள் ஒருமுறை வீதியில் விளக் கொன்றை ஏந்தி நின்று, அவ்வீதியால் சென்று வருவோரைப் பார்க்கிறார்.

சுவாமிகள் ஏன் இவ்வாறு செய்கிறார் என் பதைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் சுவாமி களிடமே வினவுகின்றனர்.

சுவாமி! விளக்கை ஏந்தியவாறு ஒவ்வொரு வரையும் பார்க்கிறீர்களே என்ன சங்கதி.

இதற்கு சுவாமிகள் கூறுகிறார்; யாரேனும் மனிதர்கள் போகிறார்களா? என்று பார்க்கி றேன்.

மனித உருவில் ஐந்தறிவு படைத்த விலங்கு களே போய்வருகின்றன. ஒரு சில மனிதர் களை மட்டுமே கண்ணுற்றேன் என்றார் சுவாமி.

ஆம், மனிதர்கள் எல்லோரும் மனிதர்கள் அன்று. மனிதன் என்றால் அவன் புனிதனாக இருக்க வேண்டும்.

இங்கு புனிதன் என்பது கௌதம புத்தனாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பதன்று.

மாறாக, மற்றவர்களை நேசிக்கின்ற - மற்றவர்கள் மீது அன்பு செலுத்துகின்ற - மற்ற வர் துன்பத்தை தன் துன்பம் போல எண்ணு கின்ற பக்குவத்தைக் கொண்டிருப்பதையே அது குறிக்கும்.

ஆம், அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும் இழுக்காஇயன்றது அறம் என்பார் வள்ளுவர்.

அழுக்காறு என்பது பொறாமையைக் குறிக் கும். அவா என்பது புலன்வழிச் செல்லுகின்ற ஆசை. வெகுளியானது கடுஞ்சினத்தைக் குறிப்பதாகும். இன்னாச் சொல் என்பது மற்றவர்களைப் புண்படுத்தும் சொல்.

ஆக, மேற்குறித்த நான்கையும் கடிந்து ஒழுகுவதே அறமாகும்.

இப்போது வள்ளுவன் கூறுகின்ற அறம் நம்மிடம் உண்டா? என்பதை நாம் ஒவ்வொரு வரும் முடிவு செய்வோமாயின், வள்ளலார் விளக்கை ஏந்தி நின்று மனிதர்கள் யாரேனும் போகிறார்களா என்று பார்த்ததன் பொருள் புரியும்.

இதை நாம் கூறும்போது அதுசரி, வள்ள லாரின் விளக்கு இப்போது எதற்கு? என்று நீங்கள் கேட்கலாம்.

எல்லாம் காரணத்தோடுதான். ஆம், எதிர் வரும் மே மாதம் 6ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல். தேர்தலில் யாருக்கு வாக் களிப்பது என்று தீர்மானிப்பதற்கு முன்னதாக, நீங்கள் வேட்பாளர்களைப் பாருங்கள். அவர்களில் மனிதர்கள் யார் என்று தீர்மானி யுங்கள்.

மனிதர்களாக இருப்பவர்களுக்கு உங்கள் வாக்குகளை வழங்குங்கள்.

ஏனெனில், கடந்த காலத் தேர்தல்களின் போது நீங்கள் வள்ளலார் போல விளக்கேந்தி நின்று வேட்பாளர்களைப் பார்க்காததால் நிலைமை எப்படியாயிற்று என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை யில்லை.

ஆகையால், இம்முறை தயவு செய்து வேட் பாளர்களில் மனிதர்களை இனங்காணுங்கள். இது எம் இனத்துக்கு மிகவும் முக்கியமானது.

# பாராளுமன்ற உறுப்பினர் ஓய்வூதியம் வேண்டாம்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

*(கொழும்பு)*

பாராளுமன்ற உறுப் பினர் ஓய்வூதியம் என க்கு வேண்டாம் என தெரிவித்துள்ள ஜனாதி பதி அநுர குமார திஸா நாயக்க தனது பாராளு மன்ற உறுப்பினர் ஓய்வூ தியத்தை நீக்குமாறு பாராளுமன்றத்திற்கு கடி தம் ஒன்றை கையளித் துள்ளதாகவும் தெரி வித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரை யாற்றிய ஜனாதிபதி, பாராளுமன்ற உறுப்பி னர்களின் ஓய்வூதிய த்தை நீக்குவதற்கு சட் டமூலம் ஒன்றை எதிர் காலத்தில் பாராளுமன் றத்தில் கொண்டு வருவ தாகவும் ஜனாதிபதி சலுகைகள் சட்டத்தை திருத்துவதற்கும் நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

சில விடயங்களை இப்போதுதான் நாங்கள் தெரிந்து கொள்கிறோம். நான் ஜனாதிபதியான பிறகு, பாராளுமன்ற உறு ப்பினராக இருந்ததற் காக எனக்கு ஓய்வூதியம் கிடைக்கிறது.

அதாவது, ஜனாதிபதி சம்பளத்திற்கு மேலதி கமாக பாராளுமன்ற உறு ப்பினரின் ஓய்வூதியமும் கிடைக்கிறது. நான் இன்று (நேற்று) கடிதம் ஒன்றை கொடுத்தேன். எனக்கு பாராளுமன்ற உறுப்பி னர் ஓய்வூதியம் வேண் டாம் என்று. இந்த நாட்டை சரி செய்ய ஆர ம்பிக்க வேண்டும் என்று நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

எனக்கு அப்படி ஒரு ஓய்வூதியம் கிடைக்கும் என்று தெரியாது. பின் னர்தான் அது கிடைப் பது தெரியவந்தது. அத னால் எனக்கு ஓய்வூ தியம் வேண்டாம் என்று பாராளுமன்றத்திற்கு கடிதம் ஒன்றைக் கொடு த்தேன் என ஜனாதிபதி அநுர குமார திஸாநா யக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## சிறுதொழில் முயற்சியாளர்கள் தூரநோக்குடன் செயற்பட வேண்டும்

### வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

*(கிளிநொச்சி)*

வடக்கு மாகாணம் தொடர்ந்தும் எல்லா வற்றிலும் பின்தங்கிய நிலையில் இருக்க முடி யாது. இங்குள்ள சிறு தொழில் முயற்சியாள ர்கள் தூரநோக்குடன் செயற்பட்டு எமது மாகா ணத்துக்கு பெருமை சேர்க்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளு நர் வேதநாயகன் தெரிவி த்துள்ளார்.

கிளிநொச்சியில் சிறு தொழில் முயற்சியாளர்க ளுக்கான "கிளி. முயற்சி யாளர் சந்தை" நேற்று ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது. இதன் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத் துரைத்த அவர்,

சிறுதொழில் முயற் சியாளர்களை ஊக்குவி ப்பதற்கான சாதகமான சூழல் உருவாகிவருகி ன்றது. இவர்களுக்கான சந்தைப்படுத்தல் கடந்த காலங்களில் மிகப்பெ ரும் சவாலாக இருந்தது. இப்போது வெளிநாடு களுக்கு கூட ஏற்றுமதி செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாம் எதிலும் வெற் றியடைய தூரநோக்கு இருக்கவேண்டும். உங் களுக்கு அது இருக்கின் றமையை வரவேற்று பாராட்டுகின்றேன். உங்களுக்கு மேலும் பல வசதிகள் செய்துதரப் படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

ஆரம்பத்தில் சிறு தொழில் முயற்சியா ளர்களாக இருந்த பலர் இன்று பெரும் கைத் தொழிற்சாலைகளை உருவாக்கி பலருக்கு வேலைவாய்ப்பை வழ ங்கிக் கொண்டிருக்கின் றனர். நீங்களும் அவ் வாறு பெரும் தொழிற்சா லைகளை உருவாக்கி ஏனையோருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டும்.

வடக்கு மாகாணத் தின் சுற்றுலா மற்றும் சிறுகைத்தொழில் முய ற்சிகளுக்கு உலக வங்கி உதவி செய்யும் சூழல் உருவாகியிருக்கின்றது. அவற்றை நாம் பயன் படுத்தி முன்னேற வேண்டும் என்றார். (ம-7)

## வவுனியாவில் இளைஞன் கைது

வவுனியா தோணி க்கல் பகுதியில் 15 வயது சிறுமி ஒருவருக்கு பாலி யல் துன்புறுத்தல் செய் தமை தொடர்பில் இளைஞர் ஒருவர் வவு னியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த 15 வயதுச் சிறுமி ஒருவரை அப்ப குதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காத லித்ததாகவும் பாலியல் துன்புறுத்தல் செய்ததா கவும் சிறுமியின் தாயா ரால் செய்யப்பட்ட முறை ப்பாட்டுக்கு அமையவே இளைஞன் கைது செய் யப்பட்டு மேலதிக விசா ரணைகளின் பின் நீதி மன்றில் முற்படுத்தப் பட்ட நிலையில் குறித்த இளைஞனை விள க்கமறியலில் வைக்கு மாறு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. (ம-7)

## தேய்பிறை அட்டமி உற்சவம்

*(கொக்குவில்)*

கொக்குவில் தலை யாழி ஞானவைரவர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை தேய்பிறை அட்டமி உற்சவம் இடம்பெறும்.

வசந்த மண்டபப்பூஜை மற்றும் நெய்விளக்கே ற்றலுடன் சகஸ்ரநாம அர்ச்சனையும் இடம் பெறும். (ம-7)

## பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களால் அடித்து நொருக்கப்பட்ட ஆய்வுகூடங்கள்

### வவு.விபுலானந்தாவில் சம்பவம்

*(வவுனியா)*

நாடளாவிய ரீதியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை இடம்பெற்று வரும் நிலையில் நேற்று வவுனியா விபுலானந் தாக் கல்லூரியில் பரீட் சைக்குத் தோற்றிய மாணவர்களினால் பாட சாலையின் ஆய்வுகூட ங்கள் சேதப்படுத்தப்பட் டுள்ளன.

பாடசாலையின் விஞ் ஞான ஆய்வுகூடம், கணனி கூடம் என்பன வே குறித்த மாணவர் களினால் கடுமையாகச் சேதப்படுத்தப்பட்டுள் ளன.

இதில் பெறுமதி வாய் ந்த பல பொருட்கள் சேத ப்படுத்தப்பட்டுள்ளதாக பரீட்சை நிலையப் பொறு ப்பதிகாரி மற்றும் வவு னியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்குத் தெரியப் படுத்தப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டு ள்ளது. (ம-7,250)

## நான் பதவி விலகவில்லை பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியில் இருந்து தாம் விலக வில்லை என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரி வித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங் களுக்காக இடமாற்றம் கோரியே தாம் கடிதம் அனுப்பியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியில் இருந்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க விலகியுள்ள தாகவும் அவர் தனது பதவி விலகல் கடித த்தை பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீர சூரியவிடம் சமர்ப்பித்துள் ளதாக செய்திகள் வெளி யாகியிருந்தன.

இந்நிலையிலேயே பொலிஸ் ஊடகப் பேச் சாளர் பதவியில் இருந்து தாம் விலகவில்லை என சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் புத்திக மன துங்க தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் (29.03.2025-03.06.2027)

## எதிலும் துடிப்புடன் செயற்படும் கடகராசி நேயர்களே!



29.03.2025 அன்று சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு மாறுகிறார். மீன ராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார். மீன ராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.

**கடகம்:** எதிலும் துடிப்புடனும், ஈடுபாட்டுடனும் ஈடுபடும் கடக ராசி நேயர்களே! எளிதில் உணர்ச்சி வசப்படுபவர் நீங்கள். உங்கள் கடமையிலும், காரியத்திலும் கண்ணாக இருப்பீர்கள். சோம்பலை விரும்ப மாட்டீர்கள். எந்த வேலையையும் முதல் முறையிலேயே முடிக்க வேண்டும் என நினைப்பவர்கள் நீங்கள். தலைமை தாங்கும் பண்பை இயற்கையிலேயே உடையவர்கள். இந்த சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப் போகிறது என்பதைப் பார்ப்போம்.

**கிரகநிலை:** இதுவரை உங்களது அஷ்டம ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி பாக்கிய ஸ்தானத்திற்கு செல்கிறார். மூன்றாம் பார்வையால் இலாப ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் தைரிய வீரிய ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் ரண ருண ரோக ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:** சனிபகவான் செழிப்போடு செல்வாக்கையும் உங்களுக்கு அள்ளித் தருவார். அனைத்துக் காரியங்களிலும் சராசரிக்கும் கூடுதலான வெற்றிகளைக் காண்பீர்கள். சேமிப்புகளை ஆதாயம் தரும் விடயங்களில் முதலீடு செய்வீர்கள். திட்டமிட்டுச் சரியாகச் செயலாற்றுவீர்கள். கடினமாக உழைத்து இலாபமடைவீர்கள். மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் உண்டாகும். தொழிலில் புதிய வாய்ப்புகளைப் பெறுவதற்காக அடிக்கடி பயணங்களை மேற்கொள்வீர்கள். சொத்து விவகாரங்களில் நிலவிய வில்லங்கம் விலகும். சமுதாயத்தில் உயர்ந்த பதவிகளையும் பெறுவீர்கள்.

உங்களை மூத்த சகோதர, சகோதரிகளுடன் இணைந்து செயற்பட வைப்பார். சிறிய முதலீட்டிலும் பெரிய வெற்றிகளைக் காண்பீர்கள். ஆதாயம் தரும் தொழில்களைத் தொடங்குவீர்கள். தொலைவிலுள்ள புண்ணியத் தலங்களுக்கு ஆன்மீகப் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு பலருக்குக் கிடைக்கும். உடல் உபாதைகள் ஏற்படாது. உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும். திறமைகள் பளிச்சிடும். குழந்தைகளை கண்டிப்புடன் வளர்ப்பீர்கள். அதேநேரம் அவர்களின் மகிழ்ச்சிக்காக சுற்றுலாவும் சென்று வருவீர்கள்.

பதற்றப்படாமல் உங்கள் செயல்களை செய்து முடிப்பீர்கள். உங்களின் நெருங்கிய நண்பர்களே உங்களை ஏமாற்ற முயற்சிக்கலாம். இதனால் மனதில் குழப்பங்கள் சூழும். இதை முன்னெச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு உங்கள் இரகசியங்களை எவரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உங்களின் கருத்துக்களை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் அவற்றை எச்சரிக்கை உணர்வுடன் வெளிப்படுத்துங்கள். மற்றபடி கடினமான வேலைகளையும் சுலபமாகச் செய்து முடிப்பீர்கள்.

வருமானம் சீராக இருப்பதால் கடன்கள் ஏற்படாது. செய்தொழிலில் ஏற்படும் போட்டிகளை சாதுர்யத்துடன் எதிர்கொள்வீர்கள். தெய்வ வழிபாட்டில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். என்றாலும் அதற்கேற்ற செலவுகளும் உண்டாகும். அதனால் அநாவசிய செலவுகளைத் தவிர்த்து, முக்கியமான செலவுகளை மட்டுமே செய்யவும். உங்களின் நடை, உடை, பாவனைகளில் அழகு கூடும். சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். எதிர்பாராத பயணங்களால் அதிஷ்ட வாய்ப்புகளைப் பெறுவீர்கள்.

உத்தியோகத்தர்கள் கடுமையாக உழைத்தாலும் அதில் மேலதிகாரிகள் குற்றம் காண வாய்ப்புண்டு. அதேசமயம் சகஊழியர்கள் உங்களுக்கு உறுதுணையாக நிற்பார்கள். இதனால் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்கு அலுவலக ரீதியாக வெளியூரில் சில காலம் தங்கிப் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகும். அலுவலகத்திலிருந்து கடன் கிடைத்து வாகனம் வாங்கும் யோகமும் பலருக்கு அமையும்.

வியாபாரிகளுக்குக் கொடுக்கல், வாங்கல் விடயங்களில் எந்தக் குறையும் ஏற்படாது. ஆனாலும் எதிலும் கவனமாக இருக்கவும். புதிய முதலீடுகளைக் கூட்டாளிகளைக் கலந்தாலோசித்த பிறகே செய்யவும். அதேசமயம் சந்தைகளில் போட்டிக்குத் தகுந்தவாறு விலையை நிர்ண யித்து இலாப மடைய நிறையவே வாய்ப்புகள் உள்ளன.




அரசியல்வாதிகள் அனைவரையும் அரவணைத்துச் செல்வீர்கள். கட்சி மேலிடத்தின் கனிவான பார்வை உங்கள் மீது விழுந்து, உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும். அரசு அதிகாரிகளும் உங்கள் நேர்மையான ஆலோசனைகளை மதித்து நடப்பார்கள். அவர்களால் உங்களின் செல்வாக்கு தொண்டர்களிடம் உயர்ந்து காணப்படும். உங்களின் மறைமுக எதிரிகளை இனங்கண்டு ஒதுக்குவீர்கள். அதேசமயம் கட்சியில் முக்கியப் பிரமுகர் யாரிடமாவது மனக்கசப்பு ஏற்படலாம். அதனால் பிறருடன் பேசும் போது ஒரு முறைக்கு இருமுறை யோசித்துப் பேசவும்.

கலைத்துறையினருக்கு அனுகூலமான திருப்பங்கள் உண்டாகும். பாராட்டும், பணமும் உங்கள் உள்ளத்தை உற்சாகப்படுத்தும். சக கலைஞர்கள் நட்புடன் பழகுவார்கள். அவர்களால் உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். ரசிகர் மன்றங்களுக்குச் செலவு செய்து மகிழ்வீர்கள். அதேநேரம் சோம்பலுக்கு இடம்கொடுக்காமல் உங்கள் காரியங்களைச் செய்யவும்.

பெண்கள் இல்லத்தில் மகிழ்ச்சியைக் காண்பீர்கள். குடும்பத்தினரிடம் பாசத்தோடு பழகுவீர்கள். புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். தேவையற்ற கவலைகள் சிலருக்குத் தோன்றலாம்.

மாணவர்கள் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். பழைய தவறுகளைத் திருத்திக்கொண்டு புத்துணர்ச்சியுடன் பாடங்களைப் படிக்கவும். உங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துத் தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டாம். நீங்கள் நீங்களாகவே இருக்கப் பழகி உங்களின் முன்னேற்றத்திற்கு அடி கோலுங்கள்.

**புனர்பூசம் 4 ஆம் பாதம்:** பிள்ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். அதே நேரத்தில் அவர்களால் செலவும் வரும். உங்களது முயற்சிகளுக்கு இருந்த முட்டு கட்டைகள் அகலும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். கையில் காசு புரளும்.

**பூசம்:** குடும்பத்தில் தேவையற்ற வீண் வாக்குவாதம் ஏற்படும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வது நன்மை தரும். நண்பர்களிடம் பகை ஏற்படலாம். பிடிவாதத்தை விட்டு விடுவது காரிய வெற்றிக்கு உதவும். வீண் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக நேரிடலாம். எதிலும் திருப்தி இல்லாத மனநிலை இருக்கும்.

**ஆயிலியம்:** பயணம் மூலம் சாதகம் கிடைக்கும். கடிதப் போக்குவரத்து நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டிவரும். புதுவியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் சுமையாக வரும்.

**பரிகாரம் :** முடிந்தால் திங்களூர் சென்று தரிசனம் செய்து விட்டு வரவும். தினசரி 108 முறையாவது "ராம" நாமத்தை ஜெபிக்கவும். "சுந்தர காண்டம்" பாராயணம் செய்வது அதிக நன்மை தரும். மல்லிகை மலரை சிவனுக்கு பிரதோஷ வேளையில் சாத்திவர குழப்பங்கள் அகலும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவாலை...

கச் சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் இணுவிலைச் சேர்ந்த பி.சாருஜன் (வயது-19) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் அவரது நண்பர்கள் 14 பேருடன் குளிப்பதற்காக நேற்று மதியம் இளவாலை சேந்தாங்குளம் கடலுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது கடலில் குளித்துக் கொண்டிருந்த குறித்த இளைஞன் திடீரென கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அந்த இளைஞனைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இளைஞன் மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டதுடன் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (ம-7)

## இந்தியப் பிரதமர்...

நேற்று வரவு செலவுத்திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சம்பூர் மின் உற்பத்தி நிலையத்தின் கட்டுமானப் பணிகளும் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டின் ஸ்திரத்தன்மை காரணமாக பாரதப் பிரதமர் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)

## தீக்காயத்துக்...

குறித்த பெண் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை தனக்குத் தானே தீமூட்டி தீக்காயங்குள்ளான நிலையில் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அன்று இரவு 10.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## எம்.பிக்களு...

றத்தில் சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பட்ஜெட் தொடர்பில் நேற்று இடம்பெற்ற விவாதத்தின்போது பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது ஒரு மில்லியன் ரூபாயாகக் காணப்படும் உறுப்பினர்களுக்கான காப்புறுதி 250,000 ரூபாயாகக் குறைக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

## அநுர அரசின்...

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 159 வாக்குகளும் எதிராக 45 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. இதன்மூலம் 114 மேலதிக வாக்குகளால் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 17ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, அஸ்வெசும கொடுப்பனவு அதிகரிப்பு, முதியோர் மற்றும் விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவு அதிகரிப்பு உட்பட பல்வேறு சலுகைகளை ஜனாதிபதி தமது அரசு வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்திருந்தார்.

18ஆம் திகதி முதல் நேற்று 21 ஆம் திகதிவரை வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு இடம்பெற்று நிறைவேற்றப்பட்டது. குழுநிலை விவாதங்களைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக்கிழமை மார்ச் 21 ஆம் திகதி மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்டது. (ம-7)

## வவுனியா...

முறைப்பாடு தொடர்பில் ஊடகவியலாளர் நேற்று கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் துன்புறுத்த[illegible] சிலரால் மனி[illegible] ஆணைக்குழு வின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் கல்வி அமைச்சிடம் விளக்கம் கோரியிருந்தோம். கல்வி அமைச்சினால் கல்வியியற் கல்லூரிகளுக்குப் பொறுப்பாக இருக்கின்ற பிரதான ஆணையாளர் ஊடாக விசாரணை நடத்த மூவர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளின் பின் அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ம-7,250)

## வேட்புமனு...

வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் கூட்டணியானது பலவேறு சபைகளுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தது.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் மூன்று சபைகளுக்கான வேட்புமனுக்களும், கரைச்சி பிரதேச சபைக்கான வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பாக யாழ். மாநகர சபைக்கான வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கான காரணமாக வியாழக்கிழமை 2023 ஆம் ஆண்டு 31ஆம் இலக்க உப பிரிவு மூன்று சட்ட ஏற்பாட்டின் பிரகாரம் பெண் உறுப்பினர் ஒருவரின் சத்தியப்பிரமாண உறுதியுரைக்காக கையொப்பம் இல்லாமையால் நிராகரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

அதேபோன்று வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவில் இளம் வேட்பாளர்களின் பிறப்புச் சான்றிதழ் முறையாக உறுதிப்படுத்தப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

இதேபோன்று தான் பருத்தித்துறை மற்றும் கரைச்சி[illegible] பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன. இளம் வேட்பாளர்களை உறுதிப்படுத்துவதாக இருந்தால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அதிகாரியால் அது மேற்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான குறித்த அதிகாரியொருவர் குறிப்பிடப்படவில்லை.

அதேநேரம் நல்லூர்ப் பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வேட்புமனுவில் ஒருவரின் விடயம் தவறாக இருந்தமையால் அவருடைய வேட்புமனு மட்டும் நீக்கப்பட்டு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே எமது விடயத்தில் ஒட்டுமொத்தமாக நிராகரிப்புச் செய்வதற்கும் ஏனைய தரப்பினருக்கு வேறு விதமாக நடைபெறுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (ம-7,33)

மஹஜன சம்பத
திகதி 2025.03.21
சீட்டிழுப்பு இலக்கம் 5782
F 2 8 9 2 9 6
அத சம்பத F 9 2 9 6
சீட்டிழுப்பு இலக்கம் 0357
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.03.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1812
A 23 29 38 73 A
Double Chance 75323

மெகா பவர்
திகதி 21/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2130
T 04 27 40 50 60

ஜய JAYA
திகதி 2025.03.21
சீட்டிழுப்பு இலக்கம் 050
S 1 1 0 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4024
சீட்டிழுப்பு திகதி 21.03.2025
S 17 22 37 41
S
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.21
சீட்டிழுப்பு இலக்கம் 1091
சிம்மம் 28 43 54 60 சிம்மம்
27143 16

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.03.2025 வெற்றி வாரம் 490
Q 9 1 4 0 7 8
84623
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,978,253.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2756
சீட்டிழுப்பு திகதி 2025.03.21 தினம் வெள்ளிக்கிழமை
51 52 59 61 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,234,180.00
DLB

சனிதா
திகதி 21.03.2025 வெற்றி வாரம் 4917
12 25 29 31 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,718,122.80
67738
DLB

சசிரி
வெற்றி வாரம் 647
சீட்டிழுப்பு திகதி 21.03.2025 வெள்ளிக்கிழமை
09 14 34
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4468
சீட்டிழுப்பு திகதி 21.03.2025 தினம் வெள்ளிக்கிழமை
02 17 35 49 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,270,374.00
271644
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 37 02 05 40 69
1932
21.03.2025 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.569,253,298.40
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2582
சீட்டிழுப்பு திகதி 2025.03.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,614,224.00
22 25 60 66 W
124382
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**Rev.சிவசம்பு சதீஸ்வரராசா (B.Th, M.Th, M.A**
**சமாதான நீதவான்(JP)**
**UNA Life member)**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் **"கிறிஸ்தவ கற்கைகள் நெறியில்" முதுமாணி** பட்டத்தைப் பெற்ற எங்கள் சகோதரன் போதகர் சதீஸ் அவர்களை சகோதரர்களாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(3704)

Congratulations

வாழ்த்துவோர் :
சகோதரர்கள்
சௌந்தரராசா, சுவேந்திரராசா,
ஜெகதீஸ்வரி, சைலஜா

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியில் 28 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்.
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது.
- கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- பயன் தரும் தென்னைகள் உள்ளன.
- நல்ல சுற்றுச் சூழல், குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 64 இலட்சம்.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் :
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

(3714)

தொடர்புகளுக்கு : ஜெயம்
**077 814 7389, 077 986 5457**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று 22.03.2025 நடைபெறுகின்ற 39 ஆவது பட்டமளிப்பு விழாவில் BA பட்டம் பெறுகின்ற



**திருமதி சிவதர்மளா அம்பிகாபதி**
(HNDM, BA)
(கிளி/ சோறன் பற்று கணேசா வித்தியாலய ஆசிரியர்)

அவர்களை மனதாரப் பாராட்டி மேலும் பல பட்டங்கள் பெற்று இன்புற்று வாழ வேலணை பெருங்குள முத்துமாரி அம்மனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
வே.பி.சண்முகநாதன் குடும்பம் (ஜே.பி),
சிவபதி, அம்பிகாபதி, சிவடேந்திரன் குடும்பம்,
மோகன்ராஜ் குடும்பம்(சியாமளா),
சிவச்செந்தூரன் குடும்பம்,
சிவகணேசன் குடும்பம், தேவகுலநாயகம் குடும்பம், கந்தசாமி குடும்பம்,
சிவலோகநாதன் குடும்பம், பானுமதி குடும்பம்,
மச்சான் - (மனோட்ஷவாணி), மங்கையற்கரசி குடும்பம்
(சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை)–தற்காலிகம்
(வேலணை 3 ஆம் வட்டாரம்)–நிரந்தரம் (3703)

Congratulations

## யாழ்ப்பாணம் - திருச்சி விமான சேவைகள்

யாழ் - திருச்சி விமானப் பயணச் சீட்டுக்கள்
42,900/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்) (946)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2513)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 219/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 268/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 412/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg பொன்னி | - 243/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= | |
| 1Kg கடலை | - 399/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 788/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 220/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2870/= | ~~3000/=~~ |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 220/= | |
| 1Kg சோயா | - 380/= | |
| 01 ஓசன் மீன்ரின் | - 380/= | ~~560/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 170/= | ~~240/=~~ |

400g Anchor — Max 01 — 1000/= ~~1050/=~~

அங்கர் யோகட் — 50/= ~~80/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (946)

Happy Supermarket
0777 8080 30

# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் அன்னலட்சுமி பத்மநாதன்**

தோற்றம் 21.04.1939 — மறைவு 28.03.2019

திதி : அட்டமி (22.03.2025)

அன்பான அம்மாவே
பாசமுள்ள அம்மம்மாவே
பார் போற்றும் அன்னையே
பாரினில் எமை தவிக்க விட்டு
பறந்ததேனோ
பொய்யாகிப் போகாதோ
பாரினில் நீங்கள் இல்லை
என்ற செய்தி
ஆண்டுகள் ஆறு ஆனபோதும்
ஆறவில்லை
உங்கள் பிரிவின் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நல்லூர் முருகனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இல.103/1,
கோயில் வீதி,
நல்லூர். (C-2514)

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org